Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 22, 2022

திங்கட்கிழமை ஒகஸ்ட் 22,2022 | ஒளி: 08 கதிர் 081 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## இன்று போராட்டம்

அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (சிபெட்கோ) தொழிற்சங்கங்கள், இன்று (22) எதிர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கூட்டுத்தாபனத்தில் மேற்கொள்ளப்படவுள்ள உத்தேச மறுசீரமைப்பு திட்டங்களுக்கு பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2



# கச்சதீவை மீட்க சட்ட நடவடிக்கை

### மத்திய இணை அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

கச்சதீவை மீட்பதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி.முரளிதரன் கூறினார்.

திருச்சியில் இடம்பெறும் ஹிந்தி பிரச்சார சபா நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்வதற்காக திருச்சி விமான நிலையத்துக்கு வந்த அவர், அங்கு ஊடகவியலாளர்களிடம் மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார். தொடர்ச்சி P2

அத்தியாவசிய பொருட்களுக்காக

## யாழுக்கு சரக்கு ரயில் சேவை

■ எம்.றொசாந்த்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசிய பொருட்களை எடுத்து வருவதற்கான சரக்கு ரயில் சேவைகளை பயன்படுத்த திட்ட முன்மொழிவுகள் புகையிரத திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகிறது எனத் தெரிவித்துள்ள போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன அதனடிப்படையில், இந்த சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம் என்றார். தொடர்ச்சி P2



# கோட்டா ஓர் அரசியல்வாதி அல்ல

### மனம் திறந்த மஹிந்த; ஓய்வு இல்லை என்கிறார்

நாட்டை விட்டு போகலாமா என்று கோட்டாபய ராஜபக்‌ஷ என்னிடம் கேட்டிருந்தால், நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்று அறிவுறுத்தியிருப்பேன் என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ, தற்போதைக்கு அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போவதில்லை என்றும் தெரிவித்தார். தொடர்ச்சி P2





## தேங்காய் விற்பனை விலை அதிகரிப்பு

கடந்த ஏலத்தின் போது, 1,000 தேங்காய்களுக்கான சராசரி விலை 1.07 சதவீதத்தால் அதிகரித்து 65,311 ரூபாய் 04 சதத்துக்கு விற்பனை செய்யப்பட்டதாக இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி இடம்பெற்ற ஏலத்தின் போதே இந்த விற்பனை இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது. தொடர்ச்சி P2

## கொழும்பில் டெங்கு கோரத்தாண்டவம்



டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த 8 மாதங்களில் 40,097 ஆக பதிவாகியுள்ளது என தேசிய டெங்கு கட்டுபாட்டு பிரிவு அறிவித்துள்ளது. ஜூலை மாதம் மட்டும் நாடளாவிய ரீதியில் 10,594 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் அரைவாசிக்கும் அதிகமானோர் மேல்மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். கொழும்பு மாவட்டத்தில் 8,609 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 1,972 பேர் கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்டர்வகள் எனவும் தெரியவந்துள்ளது. தொடர்ச்சி P2

முட்டைக்கு அதிகபட்ச விலை:

## முட்டை விநியோகம் இடைநிறுத்தம்

### அமைச்சருடன் இன்று பேச்சு

முட்டைக்கு அதிகபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நாடளாவிய ரீதியில் முட்டை விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அகில இலங்கை கோழிப் பண்ணை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்தது. தொடர்ச்சி P2

அமைச்சர் பிரசன்னவின் சித்தப்பாவின்

## வீட்டில் பணியாற்றிய சிறுமி சடலமாக மீட்பு

■ சுஜிதா

அமைச்சர் பிரசன்ன ரணத்துங்கவின் சிறிய தந்தையின் வீட்டில் பணிப் பெண்ணாக பணியாற்றி வந்த மலையக சிறுமி ஒருவர், நீச்சல் தடாகத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மஸ்கெலியா -மொக்கா தோட்டத்தைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுமியே வெள்ளிக்கிழமையன்று (19) இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் கடந்த ஆறு மாத காலமாக அமைச்சரின் சிறிய தந்தையின் வீட்டில் பணியாற்றி வந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது. தொடர்ச்சி P2

இலங்கை தொடர்பில்

## இராஜதந்திர வழிகளை பயன்படுத்துங்கள்

### அமெரிக்க இராஜாங்க செயலாளரிடம் கோரிக்கை

இலங்கை அரசாங்கத்தால், போராட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக வன்முறையை பிரயோகிக்காமல் இருப்பதற்கும், பிரஜைகளின் எதிர்ப்பு தெரிவிப்பதற்கான உரிமை பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கும், அனைத்து இராஜதந்திர வழிகளையும் பயன்படுத்துமாறு தொடர்ச்சி P2

சரியான முடிவு எடுத்திருந்தால்

## பாதாளத்தில் நாடு வீழ்ந்திருக்காது



நாட்டு மக்கள் சரியான தீர்மானத்தை அன்று எடுத்திருந்தால், இன்று இந்நாடு வீழ்ந்துள்ள நிலைக்கும், மக்கள் வீழ்ந்துள்ள நிலைக்கும் ஆளாகாமல் இருக்க தாம் ஒருபோதும் இடமளித்திருக்க மாட்டேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். தொடர்ச்சி P2

பல்கலைக்கழக மாணவர்கள் மீது

## பயங்கரவாத தடைச் சட்டம் பாய்வது வருந்தத்தக்கது



■ எம்.றொசாந்த்

பல்கலைக்கழக மாணவர் தலைவர்களை பயங்கரவாதம் எனக் கூறி, மூன்று மாதங்களுக்கு தடுப்பிலேயே வைத்திருப்பதற்கான யோசனை மிகவும் வருந்தத்தக்கது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். தொடர்ச்சி P2



## புதன் வருகிறது ஐ.எம்.எப் குழு

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று அடுத்த வாரமளவில் நாட்டுக்கு வருகை தர திட்டமிட்டுள்ளது.

ஒகஸ்ட் 24 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிக்கு இடையில் குறித்த குழுவினர், தொடர்ச்சி P2

## உதுவம்கந்தயில் தவறி வீழ்ந்த யுவதி பலி

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் குழுவுடன், மாவனெல்ல, உதுவம்கந்த பாறையிலில் ஏறிய போது, 300 அடி உயரமான பாறையில் இருந்து தவறி வீழ்ந்து பேராதனை பல்கலைக்கழக விவசாய பீடத்தின் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த விரஸ்மி கொடிதுவக்கு என்ற 27 வயதுடைய யுவதியே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் 58 பேரைக் கொண்ட குழுவுடன் ஆய்வொன்றுக்காக உதுவன்கந்த பகுதிக்கு சென்றிருந்த அவர் நேற்று (21) பிற்பகல் பாறையிலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார். தொடர்ச்சி P2

## கோழி இறைச்சிக்கும் கட்டுப்பாட்டு விலை?



கோழி இறைச்சிக்கான கட்டுப்பாட்டு விலையை அமல்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்றும் இது தொடர்பான இறுதித் தீர்மானம் இந்த வாரத்தில் எட்டப்படும் என்றும் வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். தொடர்ச்சி P2

போதைவஸ்துக்கு எதிராக

## யாழில் போராட்டம்



■ எம்.றொசாந்த்

போதைவஸ்து பாவனைக்கு எதிராக சங்கானை பஸ் நிலையத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம், நேற்று (21) நடைபெற்றது.

போதைவஸ்தினை ஒழிக்குமாறு கோரி, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

“பன்னாட்டு புகையிலை நிறுவனத்தின் வரி மோசடிக்கு உடந்தையாக இருந்தவர்களை அம்பலப்படுத்துங்கள்”, தொடர்ச்சி P2

மாணவ செயற்பாட்டாளர்களின்

## கைதுகளுக்கு எதிராக திருமலையில் கவனயீர்ப்பு

■ தீஷான் அஹமட், கீத், பைஷல் இஸ்மாயில், வடமலை ராஜ்குமார்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவ செயற்பாட்டாளர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, திருகோணமலை சர்வோதய நிலையத்துக்கு முன்னால் நேற்று (21) காலை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனை வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்திருந்தது. தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## கச்சதீவை மீட்க சட்ட நடவடிக்கை

'ஒரே நாடு, ஒரே தேர்தல்' குறித்து நாடு முழுவதும் விவாதிக்கப்பட்டு வருகிறது. அது தொடர்பாக பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

"கச்சத்தீவை மீட்பதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். சாவர்க்கர் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடவில்லை என தமிழக அரசியல்வாதிகள் சிலர் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது. அப்படி கூறுபவர்கள், வரலாற்றை ஒருமுறை சரியாகப் படித்தால், உண்மையைத் தெரிந்து கொள்வார்கள்" எனவும் தெரிவித்தார்.

சீன உளவுக் கப்பல் இலங்கைக்கு வந்துள்ள விவகாரத்தில், தேசியப் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு, தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

"தமிழகத்தைப் பொறுத்தவரை, தி.மு.க அரசாங்கத்தின் பல்வேறு ஊழல்களை சுட்டிக்காட்டி பாஜக தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறது. இதனால், தமிழக மக்களிடையே பாஜகவுக்கான ஆதரவும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது" என்றார்.

## யாழுக்கு சரக்கு..

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர், காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு "யாழ். ராணி " ரயிலில் நேற்று (21) பயணித்தார்.

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடைந்த அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வரலாற்றில் முதல் தடவையாக யாழ். மக்களை கருத்தில்கொண்டு, அதிகளவான சேவைகளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளோம்.

"புதிதாக காங்கேசன்துறை - கிளிநொச்சி அறிவியல் நகருக்கு இடையிலான "யாழ் ராணி" சேவை, தடைப்பட்டிருந்த இரவு நேர தபால் சேவை மீள ஆரம்பித்துள்ளோம். உத்தரதேவி மற்றும் கடுகதி சேவைகளின் தரிப்பிட நிலையங்களை அதிகரித்துள்ளமை உள்ளிட்டவற்றை செயற்படுத்தியுள்ளோம்.

"இவற்றுடன், யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசிய பொருட்களை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்காக சரக்கு ரயில் சேவைகளை பயன்படுத்த அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்திருந்தார்.

"அதற்குரிய திட்ட முன்மொழிவுகள் ரயில் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகிறது. இதனடிப்படையில் இந்தச் சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம் என்றார்..

"மேலும், முல்லைத்தீவு, வவுனியா, மற்றும் அநுராதபுர மாவட்டங்களின் பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்களை கருத்தில் கொண்டு, ஓமந்தை - அறிவியல் நகர் ரயில் சேவையை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

"அத்துடன், தடைப்பட்டுள்ள "ஸ்ரீதேவி" சேவையை மீள ஆரம்பிப்பதற்கு, பயணிகளின் ஆதரவை எதிர்பார்த்துள்ளதாகவும், அதிகளவு பயணிகள் பயணிப்பார்கள் என்றால் அச்சேவை மீளவும் ஆரம்பிக்கப்படும்" என்றார்.

## கோட்டா ஓர் அரசியல்வாதி அல்ல

சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான் அரசியலில் இருப்பேன் என்றும் உரிய நேரத்தில் தான் ஓய்வு பெறுவேன் என்றும் தெரிவித்துள்ள அவர், அதுவரை தான் அரசியலில் இருந்து போகப்போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியை வழிநடத்த தான் தேவையா என்பதை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே தீர்மானிக்க வேண்டும் என்று கூறிய அவர், அதை கட்சி முடிவு செய்யும் என்றார்.

தான் ஒரு சட்டத்தரணி என்பதால் நீதிமன்றங்களில் பயிற்சி பெற முடியும் என்றும் தேவைப்பட்டால் செல்வதற்குத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டை விட்டு போகலாமா என்று கோட்டாபய ராஜபக்ஷ என்னிடம் கேட்டிருந்தால், நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்று அறிவுறுத்தியிருப்பேன் என்றும் மஹிந்த சுட்டிக்காட்டினார்.

கோட்டாபய ராஜபக்ஷ, செய்ய வேண்டியதை செய்து முடித்திருக்க வேண்டும் என்றும் ஆனால் கோட்டாபய ஓர் அரசியல்வாதி அல்ல என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் அனைத்து அவலங்களுக்கும் கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பல்ல என்று குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, இதற்கு தானும் முந்தைய அரசாங்கங்கள் உட்பட அனைவரும் பதில் சொல்ல வேண்டும் என்றும் தெரிவித்தார்.

துரதிஷ்டவசமாக, தான் நம்பிய நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் கோட்டா செயல்பட்டார் என்பதால் அவரைக் குறை கூற முடியாது என்றும் குறிப்பிட்டார். (இந்தக் குறிப்பு மத்திய வங்கியில் அடுத்தடுத்து பதவிகித்த ஆளுநர்கள்)

அவர் (கோட்டா) பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது சிறந்த நிர்வாகத் திறமையை வெளிப்படுத்தினார் எனவும் ஜனாதிபதியாக அவர் கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளானார் எனவும் மஹிந்த சுட்டிக்காட்டினார்.

முன்னர் ஒரு கடும்போக்குவாதியாக இருந்த அவர், மென்மையாக மாறினார் என்றும் அவர் அதைச் செய்திருக்கக் கூடாது என்றும் குறிப்பிட்ட அவர், அவர் அரசியல்வாதி அல்ல என்றார்.

அவருக்கு முன் இருந்த பணியை அவர் சரியாக முடித்திருக்க வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

## இன்று போராட்டம்

எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை சவால் செய்யப்படவில்லை என்றாலும் பெற்றோலியம் மற்றும் மின்சாரம் ஆகிய இரண்டு துறைகளும் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்றும் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை மின்சார சபையையும் மறுசீரமைப்பதற்காக அமைச்சர் அண்மையில் ஏழு பேர் கொண்ட குழுவொன்றை நியமித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் விநியோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் பொருத்தமான நிறுவனங்களை மதிப்பிடுவதற்கு இந்தக் குழு பணிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கையில் சிபெட்கோ மற்றும் ஐஓசியுடன் பல நிறுவனங்கள் பெற்றோலியத் தொழிலில் ஈடுபடும் என்பது குறிப்பிடத்தக்கது.

பெற்றோலிய தொழிற்சங்கங்கள் இன்று (22) பிற்பகல் 2.00 மணிக்கு அமைச்சுக்கு முன்பாக எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளன.

## கொழும்பில் டெங்கு கோரத்தாண்டவம்

கம்பஹாவில் 4,969 நோயாளர்களும், களுத்துறையில் 2,719 நோயாளர்களும், கண்டியில் 3,346 நோயாளர்களும், காலியில் 2,738 நோயாளர்களும், 2,085 நோயாளர்கள் இரத்தினபுரியிலும் பதிவாகியுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்திலேயே 45 பேர் என்ற ஆகக் குறைந்த எண்ணிக்கையில் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

வருடாந்தம் முன்னெடுக்கப்படும் டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பத்தில் பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக கொழும்பு மாநகரசபை தெரிவிக்கிறது.

அதிகளவான மழைப் பெய்யும் காலங்களான ஜூன், ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு தேவையான இரசாயனத்தைக் கொள்வனவு செய்ய போதியளவான நிதி இல்லை எனவும் தெரியவந்துள்ளது.

## தேங்காய் விற்பனை விலை அதிகரிப்பு

1,000 தேங்காய்களுக்கான அதிகபட்ச விலையாக கடந்த ஏலத்தில் 62,900 ரூபாயில் இருந்து 71,200 ரூபாய் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 1,000 தேங்காய்களுக்கான குறைந்தபட்ச விலையாக 57,000 ரூபாயில் இருந்து 58,000 ரூபாய் காணப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பிட்ட ஏலத்தின் போது, வாங்குபவர்களால் 1,061,961 தேங்காய்கள் வழங்கப்பட்டிருந்த நிலையில், 589,239 தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

## முட்டை விநியோகம்...

உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளமையால் நட்டத்தில் முட்டைகளை விநியோகிக்க முடியாது என்று சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர சுட்டிக்காட்டினார்.

வெள்ளிக்கிழமை (19) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாயாகவும் பழுப்பு முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 45 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டு, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இதனையடுத்தே குறித்த சங்கத்தினால், முட்டை விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அகில இலங்கை கோழிப் பண்ணை வர்த்தகர்கள் சங்கத்துக்கும் வணிக, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்கும் இடையிலான சந்திப்பொன்று வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சில் இன்று (22) நடைபெறவுள்ளது.

கோழிப்பண்ணை வர்த்தகர்கள் சங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க வேண்டும் என்றும் வர்த்தமானிக்கு அமைவாக செயற்படாவிட்டால் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## வீட்டில் பணியாற்றிய...

குறித்த சிறுமி நீச்சல் தடாகத்தில் வழுக்கி விழுந்தமைக்கான சிசிடிவி காட்சிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கம்பஹா மற்றும் மஸ்கெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பாதாளத்தில் நாடு...

ஐக்கிய மக்கள் சக்தியின் யட்டியந்தோட்டை தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் சனிக்கிழமை (20) கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அதிகாரமிக்கவர்கள் தமது சொந்த அதிகார நிகழ்ச்சி நிரலை ஸ்திரப்படுத்தும் வகையில் இத்தருணத்திலும் சர்வகட்சி சூதாட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டு மக்கள் மிகவும் உதவியற்ற நிலையில் இருக்கும் போது காக்கை அரசாங்கமொன்றில் அமைச்சுப் பதவிகளை பெறுவது எவ்வாறு எனவும் கேள்வி எழுப்பினார்.

எவ்வாறாயினும், நாடு முன்னெப்போதும் இல்லாத வகையில் இக்கட்டான சூழ்நிலைக்கு முகம் கொடுத்திருப்பதாக தெரிவித்த அவர், சம்பிரதாய எதிர்க்கட்சி என்ற வகிபாகத்துக்கு அப்பால் சென்று நாட்டிற்காக அர்ப்பணிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டை கட்டியெழுப்பும் பணி தொடர்பில் மேலும் கலந்துரையாடும் விதமாக அடுத்த வாரம் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளதாகவும் நாட்டுக்கான தமது பொறுப்பை குறையின்றி நிறைவேற்றுவதாகவும் குறிப்பிட்டார்.

## உதுவம்கந்தயில் தவறி...

சடலம் தற்போது மாவனெல்ல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## இராஜதந்திர வழிகளை பயன்படுத்துங்கள்

அமெரிக்க காங்கிரஸின் 10 உறுப்பினர்கள், அந்நாட்டின் இராஜாங்க செயலாளரிடம் கோரியுள்ளனர்.

கடிதம் மூலமாக அமெரிக்க காங்கிரஸின் 10 உறுப்பினர்களும் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்

இலங்கையில் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டமை, ஊரடங்கு சட்டம் மற்றும் போராட்டங்களை அடக்குவதற்கு தோட்டாக்களை பயன்படுத்துதல் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்க காங்கிரஸின் 10 உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இலங்கைக்கு தேவையான சந்தர்ப்பங்களில் உடனடி உதவிகளை வழங்குமாறு அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் தலைவர் சமந்தா பவர் ஆகியோரிடம் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பயங்கரவாத தடைச் சட்டம் பாய்வது வருந்தத்தக்கது

அரசாங்கம், சர்வதேச சமூகத்துக்கு இது குறித்து பதில் சொல்ல வேண்டி இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அது குறித்து மேலும் தெரிவிக்கையில், "பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட மூவர், 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்தது.

"பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடை கட்டளை ஒன்றை பெற்று மூன்று மாதங்கள் தடுத்து வைத்திருப்பதற்கு தாங்கள் கோரியிருப்பதாகவும் பொலிஸார் கூறியுள்ளார்கள்.

"பயங்கரவாத தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்று அனைவரும் ஏற்றுக் கொண்ட விடயம். கடந்த ஆட்சிக் காலத்திலே பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கி, வேறொரு சட்டத்தை கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்திருந்தது.

"இந்த பயங்கரவாத தடைச் சட்டம் மிக மோசமானது. அதை முற்றாக நீக்கப்பட வேண்டும் என நாடு பூராகவும் போராட்டம் நடத்தி வருகின்றோம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுகின்ற வரை அதனை உபயோகிக்க மாட்டோம் என வாக்குறுதி கொடுத்திருக்கின்றார்கள். அவ்வாறான சூழ்நிலையில் தான் திடீரென மீண்டும் பயங்கரவாத தடை சட்டத்தை உபயோகிக்கின்றார்கள்.

"காலாவதியாகி இருக்க வேண்டிய பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கப்பட வேண்டுமென அனைவரும் ஏற்றுக் கொண்டு கொண்டிருக்கின்றபோதும் பயங்கரவாத தடைச்சட்டத்தை உபயோகிக்க ஆரம்பிப்பது மிகவும் மோசமான அடிப்படையாக நாங்கள் கருதுகிறோம்" என்றார்.

## புதன் வருகிறது ஐ.எம்.எப் குழு

நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

பொருளாதார, கடன் மறுசீரமைப்பு மற்றும் கொள்கைகள் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் மேலும் கலந்துரையாடுவதற்காக இவர்கள் வருகை தரவுள்ளனர்.

## கோழி இறைச்சிக்கும் கட்டுப்பாட்டு...

எவ்வாறாயினும், கோழிப் பண்ணை வர்த்தகர்கள் விலையைக் குறைக்க உடன்படுவார்களாயின் கட்டுப்பாட்டு விலை தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு வாரங்களில் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் மற்றும் பல நுகர்பொருட்களின் மொத்த விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும், சில்லறை விலை எதிர்வரும் நாட்களில் குறையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## யாழில் போராட்டம்

யாழில் தடை செய்யப்பட்ட போதை ஊசி மருந்து பாவனைக்கு எதிராக அரசே நடவடிக்கை எடு" மற்றும் "மது நிறுவனங்களுக்கு இளைஞர்களின் எதிர்காலத்தை விற்காதே" போன்ற வாசகங்கள் உள்ளடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு, இக்கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனத்தினர், வலி. மேற்கு பிரதேச சபையினர் மற்றும் இளைஞர், யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்

## கைதுகளுக்கு எதிராக திருமலையில் கவனயீர்ப்பு

"வடக்கு, கிழக்கைச் சார்ந்த மனித உரிமைப் பாதுகாவலர்கள், சிவில் அமைப்புகள், பெண்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து, மேதகு ஜனாதிபதியான தங்களிடம், 18 ஆவணி 2022 அன்று கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மாணவ செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள் சார்ந்த எமது பகிரங்கக் கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வக்கின்றோம்" என தெரிவித்து, இக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்துத் தெரிவிப்பதற்கான சுதந்திரம் ஆகியன அரசியலமைப்பின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளாகும்.

"இந்த உரிமைகளை பல்கலைக்கழக மாணவ செயற்பாட்டாளர்களும் சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்களும் தமது கோரிக்கைகளை தமது நாட்டின் சக பிரஜைகளுக்கும் அரசாங்கத்துக்கும் வெளிப்படுத்துவதற்காக பயன்படுத்தினர். அவர்கள் வன்முறையில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

"எனவே, பல்கலைக்கழக மாணவ செயற்பாட்டாளர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ தடுத்து வைக்க வேண்டாமெனக் கோருகிறோம்" என கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டோர் மகஜர் முன்வைத்தனர்.

### சர்வதேசத்துக்கு முன் அரசாங்கம்

# நாட்டை ஆபத்தில் தள்ளுகிறது

ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் நடைபெற உள்ள நிலையில், அமைதியான போராட்டங்கள் மீது தாக்குதலை நடத்தி, சர்வதேசத்துக்கு முன்பாக, நாட்டை அரசாங்கம் ஆபத்தில் தள்ளுவதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இதற்கான பிரதிபலனை நாட்டு மக்கள் அனுபவிக்க நேரிடும் எனவும், நட்டமடையும் நிறுவனங்கள் தொடர்பில் பிரச்சினை இல்லை. ஆனால், இலாபமடையும் அரச நிறுவனங்களான இலங்கை டெலிகொம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றைத் தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதாகவும் கூறினார்.



எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச சட்டங்கள் அமைதியான போராட்டங்களை ஏற்றுக்கொள்கின்றன. அண்மையில் லிப்டன் சுற்றுவட்டத்துக்கு முன்பாக நடைபெற்ற மாணவர் பேரணி மீது, பொலிஸாரும் பாதுகாப்புத் தரப்பினரும் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர் எனவும் கூறினார்.

அடுத்த மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாக உள்ளது. இதில் ஏற்கெனவே இலங்கைக்கு எதிரான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. சர்வதேசத்தின் உதவிகள் தேவைப்படும் இந்நேரத்தில், சர்வதேச சட்டங்களை மீறி அரசாங்கம் செயற்படுவது பொறுத்தமற்றது என்றார்.

### ஹர்ஷவுக்கு பதவி வழங்குவது உறுதி

## கோப், கோபா பதவிகளில் இழுபறி

அரசாங்கக் கணக்குகள் பற்றிய பாராளுமன்ற குழுவின் தலைவர் பதவி, ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்குவது உறுதி செய்யப்பட்டுள்ளபோதிலும், பொது கணக்குகளுக்கான குழு (கோபா), பொது நிறுவனங்களுக்கான குழு (கோப்), குழுக்களின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சிக்கு வழங்குவது தொடர்பில் உறுதியற்ற நிலை காணப்படுகிறது.

கோப், கோபா குழுக்களின் தலைவர் பதவிகளை தங்களது எம்.பிக்களான எரான் விக்கிரமரத்தன, கபிர் ஹசிம் ஆகியோருக்கு வழங்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்க நிதி பற்றிய பாராளுமன்ற குழுவின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமென பாராளுமன்ற நிலையியல் கட்டளையில் குறிப்பிட ப்பட்டுள்ளபோதிலும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததும், நிலையியல் கட்டளையை இரத்து செய்து, ஆளுங்கட்சி உறுப்பினருக்கு தலைவர் பதவி வழங்கப்பட்டிருந்தது.

கடந்த ஜூன் மாதம் நாட்டில் போராட்டங்கள் வலுப்பெற்றிருந்தபோது கோப், கோபா குழுக்களின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்குவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அப்போது நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் உறுதியளித்திருந்ததாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

## சிறந்த பயணத்தை ஆரம்பித்துள்ளோம்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக வாக்களித்த 69 இலட்சம் மக்களை, அகௌரவப்படுத்த வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தின் மீது அதிருப்தியில் உள்ள ஆளுங்கட்சி எம்.பிக்கள் குழு, அநுராதபுரத்தில் மத வழிபாடுகளில் நேற்று முன்தினம் (21) ஈடுபட்டு, தங்களது அரசியல் பயணத்தை ஆரம்பித்திருந்தனர்.

இதன்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய டலஸ், முன்னாள் ஜனாதிபதி கோட்டாவுக்கு வாக்களித்திருந்த 69 இலட்ச மக்களையும் அகௌரவப்படுத்த வேண்டாம். 69 இலட்ச மக்களையும் அவமதிக்க வேண்டாம் எனவும் கூறினார்.

குறிப்பாக, நாட்டை சிறந்த நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றே 69 இலட்ச மக்கள் வாக்களித்தனர். ஆனால் அதனை எம்மால் செய்ய முடியாமல் போனது. அதற்கான பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்றார்.

## சர்வகட்சியா, தேசிய அரசாங்கமா?



அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து சர்வகட்சி அரசாங்கத்தில் செயற்பட வேண்டும் என்றே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் தினேஸ் குணவர்தனவும் விரும்புவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஆனால், சர்வகட்சி அரசாங்கமா, தேசிய அரசாங்கமா என்பது, இதுவரையில் கேள்விக்குறியாகவே இருப்பதாகவும் எவ்வாறாயினும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, சர்வகட்சி அரசாங்கத்தில் ஒன்றிணையாது என அறிவித்துள்ளது என்று கூறினார்.

## முக்கிய தீர்மானங்களை எடுக்க நேரிடும்

எதிர்கால அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், நாட்டுக்காக முக்கியமான தீர்மானங்களை எடுக்க நேரிடும் என்றார்.

ஜனாதிபதி தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது, பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவாக செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு நேற்று முன்தினம் (20) அநுராதபுரத்தில் மத வழிபாடுகளில் ஈடுபட்டது.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பீரிஸ், எதிர்கால பயணத்தை ஆரம்பித்துள்ளோம். நாட்டுக்காக சில முக்கியமான தீர்மானங்களை எடுக்க நேரிடும் எனவும், ஸ்ரீமகாபோதி, ருவன்வெலி சாயவுக்கு முன்பாக நாம் எமது பயணத்தை ஆரம்பித்துள்ளோம் எனவும் கூறினார்.



## விவசாயம் தொடர்பில் கவனம் செலுத்தவும்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு, விவசாயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெரும்போகம், தேயிலை, தென்னை, இறப்பர் பயிர்ச் செய்கைகளுக்கான உரம் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.


### தேவை

வெள்ளவத்தையில் உள்ள வீட்டுக்கு வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி மற்றும் கிருலப்பனை ஆகிய இடங்களில் இருந்து மட்டும் பெண்கள் தேவை. நடந்து வரும் தூரத்தில் இருப்பவர்கள் மட்டும் 0760326320 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சமைக்க மற்றும் சமையலறையை சுத்தம் செய்யவேண்டும். காலை 8.30 மணிமுதல் மாலை 4 மணிவரை மட்டுமே 40-55 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் அழைக்கவும்.


## நல்லூர் திருவிழாவின் போது பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் HUTCH



Broadband தரவு இணைய சேவைகளுக்கான நாட்டின் வளர்ந்து வரும் தெரிவான HUTCH, பொருளாதார ரீதியாக சவாலான இவ்வேளையில் மக்களுக்கு ஆதரவளிப்பதற்கான அதன் முயற்சிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது. HUTCH மேற்கொண்டு வரும் பல சமூக ஆதரவு முயற்சிகளுக்கு மத்தியில், யாழ்ப்பாணத்தின் நல்லூர் மகோற்சவத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி HUTCH தனது பங்களிப்பை வெளிப்படுத்தி வருகின்றது.

வட மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மிகப்பெரிய இந்து ஆலய திருவிழாவாக நல்லூர்த் திருவிழா விளங்குகின்றது. இம்மகோற்சவத்தில் கலந்துகொள்பவர்களுக்கு அன்னதானம் வழங்கும் புனிதமான பாரம்பரிய நிகழ்வாக அன்னதான நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

நாட்டில் தற்போது பணவீக்கம் நிலவுகின்றது. குறிப்பாக உணவுத் தட்டுப்பாடானது 80%க்கு மேல் அதிகரித்து வரும் நிலையில், நாடு முழுவதும் உள்ள மக்கள் போசாக்கான உணவை உண்பதில் மிகவும் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள். எனவே, HUTCH ஆனது அதன் சமூகத்திற்கான ஆதரவு முயற்சிகளின் ஒரு பகுதியாக, அன்னதான உதவிகளை வழங்குவதன் மூலம் இச்சுமையை ஓரளவு குறைக்கும் முயற்சியை முன்னெடுத்துள்ளது. நல்லூர் மைலூரான் அரங்கில் ஒகஸ்ட் 05ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 25ஆம் திகதி வரை 20 நாட்கள் இடம்பெறும் HUTCH அன்னதான நிகழ்வில் பல்லாயிரக் கணக்கானோருக்கு உணவு வழங்கப்படவுள்ளது.

இந்த முயற்சி குறித்து கருத்து தெரிவித்த HUTCH Sri Lanka நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. திருக்குமார் நடராசா, "நல்லூர் திருவிழாவில் வழக்கமான தனது வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, வட பிராந்திய மக்களுக்கு சிறந்த உணவை வழங்குவதற்காக இந்நிதியை ஒதுக்க HUTCH தீர்மானித்துள்ளது." என்றார்.

HUTCH Sri Lanka பிரதம நிறைவேற்று அதிகாரி திருக்குமார் நடராசாவின் குடும்பத்தினர், இலங்கையின் வட பகுதியின யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள். திருக்குமார் நடராசா இங்கிலாந்தில் கல்வி பயின்றுள்ளதோடு, இலண்டன் இம்பீரியல் கல்லூரி உள்ளிட்ட மூன்று முன்னணி ருமு பல்கலைக்கழகங்களில் மூன்று பட்டங்களைப் பெற்றுள்ளார். ஹொங்கொங்கில் உள்ள Hutchison Telecom நிறுவன தலைமையகத்தில் கடந்த 25 ஆண்டுகளாக பணியாற்றியுள்ள அவர், ஆசியாவில் பல்வேறு செயல்பாடுகளுக்கான பதவிகளில் நியமனம் பெற்றுள்ளார்.

HUTCH Sri Lanka ஆனது, CK Hutchison Holdings Limited நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். இது Global Fortune 500 நிறுவனமாகவும் விளங்குவதோடு, உலகளாவிய தொலைத்தொடர்பு செயல்பாடுகளை '3' அல்லது Three எனும் வர்த்தகக் குறியீட்டின் கீழ் முன்னெடுத்துள்ளது.


















பயங்கரவாத தடைச் சட்டத்தின் கொடூரத்தை

# சிங்கள தேசம் உணருகிறது

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கொடூரத்தை, இப்போது தான் சிங்கள தேசம் உணரத் தொடங்கியிருக்கிறது எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், ‘கோட்டா கோ கம’ போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது பயங்கரவாத தடைச் சட்டம் பாய இருக்கிறது. இந்தக் கொடூரமான சட்டம் மூலம் தமிழர்கள் 30 வருடங்களுக்கு மேலாக துன்புறுத்தப்படுகிறார்கள்.

“இலங்கை அரசாங்கத்தின் தொடர் அடக்குமுறையால் வெகுண்டெழுந்த தமிழ் இளைஞர்களை அச்சுறுத்தவும் தமிழ் மக்களை துன்புறுத்தவுமே இந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தத் தடைச் சட்டத்தால் வருடக்கணக்கில் எம்மவர்கள் விசாரணை இன்றி சிறையில் இருக்கிறார்கள்.



“அதேவேளை, இப்போது இலங்கையின் அமைச்சர்கள் வடக்கை நோக்கிப் புறப்படுகிறார்கள். காரணம் செப்டெம்பர் மாதத்தில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடர் ஆரம்பமாக இருக்கின்றது. இந்தக் கூட்டத்தொடரை சமாளிப்பதற்கு தாம் வடக்கிற்கும் வந்து அபிவிருத்தி வேலைகளை செய்கிறோம் எனக் காட்ட இலங்கை அரசு முயல்கிறது.

“இந்த நாடு பொருளாதார ரீதியில் அதளபாதாளத்துக்கு போயிருக்கிறது. எதிர்வரும் மாதங்களில் நிலை இன்னும் மோசமடையலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்.

“இந்த நிலையை ரணில் விக்கிரமசிங்க மாற்றவேண்டும் என்றால், இந்த நாட்டில் புரையோடிப்போயிருக்கிற இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு முயலவேண்டும்.

“விவசாயத்துக்குத் தேவையான எரிபொருளையும் வழங்கினாலே எமது மக்கள், தமக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொள்வதோடு, இந்த நாட்டுக்கே வழங்குவார்கள்.

“மக்களிடம் நாம் வினயமாக கேட்கிறோம். நீங்களும் சுயமாக வீடுகளில் வீட்டுத் தோட்டம் செய்யுங்கள்” என்றார்.

இடமாற்றங்களை

# மறுபரிசீலனை செய்ய கோரிக்கை

■ எம்.எஸ்.எம்.ஹனிபா

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை இடைநிறுத்தி, பதில் கடமை விடயம் தொடர்பிலும் மறுபரிசீலனை செய்யுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழில் சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ. முபாறக், நேற்று (21) தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மற்றும் நிர்வாக சேவை உத்தியோகத்தர் பதவிகளில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிசிறப்புத் தரத்தை



சேர்ந்தவர்கள் கடமையாற்றுவதுடன், அத்தரத்தை சேர்ந்தவர்கள் இல்லாத சபைகளில் அவர்களின் பதில் கடமைகளை முகாமைத்துவ சேவை தரம் 1 இனைச் சேர்ந்தவர்கள் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர்.


“கிழக்கு மாகாணத்தில் தற்போது மேற்படி உத்தியோகத்தர்களில் சுமார் 20 பேர் திடீரென இடம்மாற்றப்பட்டு உள்ளனர். வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான இடமாற்றங்கள் செய்ய முடியாது .

அத்துடன், பதில் கடமையாற்றியார்களில் சிலர் பதில் கடமையில் இருந்து நீக்கப்பட்டு, அவ்விடங்களுக்கு வேறு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரவிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் அதிசிறப்பு தரத்தினருக்கு நேர்முகப்பரீட்சை தற்பொது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவுள்ள இத்தருணத்தில், இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது, சில வெற்றிடங்களை இல்லாமலாக்கி குறித்த சிலருக்கு சில இடங்களை வழங்குவதற்கான திட்டமிட்ட செயற்பாடாகும் என்றார்.

முட்டைகளை

## அதிக விலைக்கு விற்றால் கடும் சட்ட நடவடிக்கை



■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் கூடிய விலைக்கு முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாவணையாளர் அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரி அறிவித்துள்ளார்.

முட்டைக்கான நிர்ணய விலையை பாவனையாளர்கள் அதிகார சபை விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிட்டுள்ளது.

வெள்ளை நிற முட்டை 43 ரூபாயும், பழுப்பு நிற முட்டை 45 ரூபாய்க்கும் விற்பனை செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, விற்பனையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள், அதி கூடிய விலைக்கு முட்டையை விற்பனை செய்தல், விலைப்பட்டியல்களை காட்சிப்படுத்தாமை போன்றவற்றுக்கு, எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது இது தொடர்பில் யாழ். மாவட்ட வர்த்தகர்களுக்கு, பாவனையாளர்கள் அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகள் ஊடாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது என மேலும் தெரிவித்தார்.



## சந்திப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளருக்கும் யாழ்ப்பாண மாநகர சபை மேயருக்கும் இடையிலான சந்திப்பு, நேற்று முன்தினம் (21) இடம்பெற்றது. (படம்: எம். றொசாந்த்)

சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த

# கப் குடைசாய்ந்ததில் இளைஞன் உயிரிழப்பு

■ எம்.றொசாந்த்

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த கப் ரக வாகனம் குடைசாய்ந்ததில் அதில் பயணித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி முள்ளி பகுதியில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்ற இவ் விபத்தில், ஜெ.ஜெயந்தன் (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

கொடிகாமம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணலை ஏற்றிக்கொண்டு, கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் மிக வேகமாக பயணித்த கப் வாகனம், முள்ளி சந்தி பகுதியில் திருப்ப முற்பட்ட வேளை, வாகனம் கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்துள்ளது.

அதன்போது வாகனத்தின் பின்னால், மணலின் மேல் இருந்து பயணித்த குறித்த இளைஞன் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

அதனை அடுத்து இளைஞனை மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சிவமகாரஜாவின் 16ஆவது நினைவு

■ எம்.றொசாந்த்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும், ‘நமது ஈழநாடு’ பத்திரிகையின் பணிப்பாளருமான சி.சிவமகாரஜாவின் 16ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு, தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.

முன்னதாக தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க வளாகத்திலுள்ள சி.சிவமகாரஜாவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தப்பட்டது.

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் உமாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சி.சிவமகாராஜா, 2006 ஓகஸ்ட் 20ஆம் திகதி, தெல்லிப்பளையிலுள்ள அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.



மாந்தை கிழக்கு செல்வபுரத்துக்கு

## போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தரவும்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு செல்வபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்கள், வீதிகள் செப்பனிடப்பட்டு, வசதிகள் நிறைந்ததாக இருந்தாலும் பஸ் போக்குவரத்து வசதிகள் எதுவும் தமது கிராமத்துக்கு செய்து கொடுக்கப்படவில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் குறித்த பகுதி மக்கள் மீள் குடியேறி, 10 வருடங்கள் கடந்தும் ஒழுங்கான போக்குவரத்து வசதிகால் இன்றி பெரிதும் அல்லல் படுவதாக தெரிவித்தனர்.

பாண்டியன்குளம் பிரதேசத்துக்கு காரைநகர் அரச பஸ் சங்கத்துக்கு சொந்தமான இரண்டு அரச பஸ் வருவதுடன், அவை இரண்டும் பாண்டியன்குளம் பாடசாலையுடன், தமது சேவையை நிறைவுறுத்தி அதில் ஒரு பஸ் காலை 1 மணியளவில் மாங்குளம் வரையான சேவையை வழங்கி வருகின்றது. மற்றையது சேவை எதுவும் இன்றி அங்கேயே தான் இருக்கின்றது.எனவும் மக்கள், தெரிவித்தனர்.



நகைக்கடை

## வியாபாரிகளுக்கு பிரச்சினையா?

### உடன் அழைக்கவும்

■ பாறுக் ஷிஹான்

நகைக்கடை வியாபாரிகள் தற்போது முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் விழிப்பூட்டல் கலந்துரையாடல், கல்முனை தலைமையக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (20) மாலை இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் இடம்பெற்றது

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடியில், நகைக்கடை உரிமையாளர்கள் மற்றும் நகை அடகு பிடிப்பாளர்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள், நகைக்கடைகளில் பணியாற்றும் பணியாளர்களின் விவரங்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

**“ நகைக்கடை வியாபாரிகள் மற்றும் அடகுபிடிப்பாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு 0718591161 அல்லது 0672229226 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தருமாறும் பொலிஸார் கேட்டுக்கொண்டனர்**

மேலும், நகைக்கடை வியாபாரிகள் மற்றும் அடகுபிடிப்பாளர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதற்கு 0718591161 அல்லது 0672229226 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத்தருமாறும் பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

நகை கடை உரிமையாளர்கள் மற்றும் நகை அடகு பிடிப்பாளர்கள் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றி, தத்தமது கருத்துகளை பகர்ந்து கொண்டதுடன், தமது நலனில் அக்கறை எடுத்து செயற்படவுள்ள கல்முனை தலைமையக பொலிஸாருக்கு நன்றிகளையும் தெரிவித்து கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலானது கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ வாஹிட் நெறிப்படுத்தியதுடன், கல்முனை வர்த்தக சங்க தலைவர் கே.எம்.எம் சித்தீக் உட்பட நகைக் கடை உரிமையாளர்கள் மற்றும் நகை அடகு பிடிப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



சிகிச்சை பலனில்லை;

# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் மரணம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கீச்சான்பள்ளம் - ஒள்ளிக்குளம் வீதியில் கடந்த இருபது நாள்களுக்கு முன்னர் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து, சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேயனோடை, ஈரான் சிற்றி பிரதேசத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 37 வயதுடைய ஏ.பி.அஹமட் அலி என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கடந்த இருபது நாள்களுக்கு முன்னர் கீச்சான்பள்ளம் - ஒள்ளிக்குளம் வீதியில் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது, விழுந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி வெள்ளிக்கிழமை (19) உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு, அன்றிரவே நல்லடக்கம் செய்யப்பட்டது.



## பச்சை நிறமாகும் மட்டக்களப்பு வாவி

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு வாவியின் நீர்ப்பரப்பு ‘பூங்கறை’ எனும் ஒருவித பச்சைப் படையால் சூழப்பட்டுள்ளதால், மட்டக்களப்பைச் சூழ அமைந்துள்ள மட்டக்களப்பு நெடு வாவி மாசடைந்துள்ளது.

இதன் காரணமாக சில இடங்களில் துர்நாற்றம் வீசுவதுடன், வாவியில் வலைவீசி மீன்பிடிக்க முடியாமல் உள்ளதாகவும் இந்தப் ‘பூங்கறை’யில் ஒரு வித பசைத் தன்மை உள்ளதால், அவை வலைகளில் ஒட்டிக் கொள்வதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

வருடாந்தம் இத்தகைய ‘பூங்கறை’ எனும் பச்சை படர்தல், வாவியின் மேற்பரப்பில் சில நாள்களுக்குப் படர்ந்து, பின்னர் இயற்கையாகவே மறைந்து விடுவதாகவும் ஆனால், இந்த வருடம் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக காணப்படுவதாகவும் மீனவர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் உயிரின ஆய்வாளருமான கலாநிதி பெரியதம்பி வினோபபாவிடம் கேட்டபோது, இது இயல்பாகவே நடக்கும் நிகழ்வு என்றாலும் பயிர்ச் செய்கைக்கு இடப்படும் இரசாயன உரக்கலவைகளில் பொதிந்துள்ள நைற்ரோஜன் பொஸ்பேற் நீர் நிலைகளை அடையும்போது, இத்தகைய பச்சைப் படலம் உருவாகிறது என்றார்.

# தடுத்து வைத்துள்ளமை தவறான முன்னுதாரணம்

### இராதா எம்.பி குற்றச்சாட்டு



டி.ஷங்கீதன்

அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தி, அனைத்து பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகேயின் கைதும் தடுத்து வைப்பும் தவறான முன்னுதாரணமாகும் என, பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ் இளைஞர், யுவதிகளின் சாத்வீக போராட்டத்தை அவசர கால சட்டத்தை பயன்படுத்தி அன்று கட்டுப்படுத்திய அரசாங்கம் அதே அவசரகால சட்டத்தை பயன்படுத்தி சிங்கள இளைஞர் யுவதிகளை இன்று, கட்டுப்படுத்துவது சர்வதேசத்துக்குக் கொடுக்கின்ற தவறான முன்னுதாரணமாகும் என குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் செய்த குற்றச்சாட்டு என்ன? மக்களுக்காக வீதியில் இறங்கி சாத்வீக போராட்டம் செய்ததா? அல்லது நாட்டு மக்களை ஒன்றிணைத்து பொருளாதார வீழ்ச்சிக்கு வித்திட்ட ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர்களை பதவிகளில் இருந்து வெளியேற்றியதா?அல்லது அவர்கள் ஆயுதம் ஏந்தி பேராடினார்களா? யாருடையை சொத்தையும் கொள்ளையடித்தார்களா? நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு பங்களிப்பு செய்தார்களா?எதுவும் இல்லை என்றார்.

ஆனால், இவற்றையெல்லாம் செய்தவர்களை வெளியில் விட்டுவிட்டு, மக்களுக்காக போராட்டம் செய்தவர்களை கைது செய்து அவர்களை 90 நாட்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய முற்படுவது அவசர கால சட்டத்தை பயன்படுத்தியே.இது சர்வதேசத்திற்கு நாம் கொடுக்கின்ற தவறான செய்தியாகும்.

இனிமேல் யாரும் சாத்வீக போராட்டத்தை இலங்கையில் முன்னெடுக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டுவதாகவே இந்த செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஆனால் இதன் மூலமாக சாத்வீக போராட்டங்களை கட்டுப்படுத்தலாம் என ஜனாதிபதியும் அரசாங்கமும் நினைத்தால் அது அவர்களின் தவறான புரிதலாகவே கருத வேண்டியுள்ளது என்றார்.



# வாவியில் மிதக்கும் மரைகளின் உடலங்கள்

### ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் பணிப்பு

எஸ்.கணேசன்

அம்பேவெல வாவியில் கடந்த இரு வாரங்களுக்குள் 20 இற்கும் மேற்பட்ட மரைகள் இறந்து கிடந்த சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில், இதன் பின்புலம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர தனது செயலாளருக்கு பணித்துள்ளார்.

ஹோட்டன் சமவெளி தேசிய சரணாலய பகுதியில் மான், மரை உள்ளிட்ட வன விலங்குகள் சட்டவிரோதமான முறையில் வேட்டையாடப்படுகின்றன. இதற்காக பயிற்றுவிக்கப்பட்ட வேட்டை நாய்களும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

தனி நபர்கள் மற்றும் சில குழுவினர் இணைந்து, வன விலங்குகளை வேட்டையாடி, அப்பகுதியில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளுக்கு விற்பனை செய்து வருவதாகவும், அப்பகுதிகளுக்கு வருபவர்கள் மான், மரை உள்ளிட்டவற்றை உண்பதில் ஆர்வம் காட்டுகின்றனர் எனவும் தெரியவந்துள்ளது.

கூட்டமாக வரும் மான்களை, வேட்டை நாய்கள் துரத்திச்சென்று கொல்கின்றன, நாய்களுக்கு அஞ்சி ஓடும்போது சில மான்கள் வாவிக்குள் விழுகின்றன. அதன்பின்னர் அவற்றை வேட்டைக்காரர்கள் கைப்பற்றுகின்றனர். இப்படியான முறையிலேயே வேட்டை இடம்பெறுகின்றமை தெரிய வந்துள்ளது.

எனினும், கடந்த சில நாட்களாக வேட்டையர்கள் எவரும் வருவதில்லை எனவும், நாய்கள் அநாதரவாக விடப்பட்டுள்ளன எனவும் அப்பகுதியில் உள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாய்களின் வேட்டையை விடவில்லை. அவை மரைகளை துரத்திச் செல்கின்றன. இதனால் வாவிக்குள் விழுந்து உயிரிழந்த மான்களே சடலமாக மிதப்பதாக அப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் தெரிவித்தனர்.



## மாணவர்களுக்கு நேசக்கரம்...

நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் பாதிப்புக்குள்ளான ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட வட்டவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு புத்தகப் பைகள் மற்றும் காலணிகள் எதிர்கால மலையகம் அமைப்பின் ஊடாக வழங்கிவைக்கப்பட்டது. மத்திய கிழக்கில் பணிப்புரியும் பணியாளர்களின் பங்களிப்போடு இப்பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.
(நீலமேகம் பிரசாந்த்)





நாவலப்பிட்டி

# நகர பிதாவைத் தாக்கியவர் கைது

நாவலப்பிட்டி நகர பிதாஅமல் பிரியங்கர மீது, தாக்குதல் நடத்திய வர்த்தகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோழி இறைச்சி விற்பனையில் ஈடுபடும் ஒருவரே இவ்வாறு தலங்கம கொஸ்வத்த பகுதியில் வைத்து தாக்குதல் நடத்தியுள்ளதுடன், நகர மேயரின் வாகனத்துக்கும் சேதம் விளைவித்துள்ளார்.

மே மாதம் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களின் போது, சந்தேகநபரும் மேலும் சிலரும் நாவலப்பிட்டி நகர பிதா பயணித்த வாகனத்தை மறித்து தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் அதனையடுத்து தாக்குதல் நடத்தியவர்கள் அடையாளம் காணப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 44 வயதுடைய தலங்கம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

# மகளை துஷ்பிரயோகம் செய்த தந்தை கைது

என்.ஆராச்சி

புளத்கொஹுபிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புஸ்பனே கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கிராம்மொன்றில், தனது மகளான 15 வயது சிறுமியை துஸ்பிரயோகப்படுத்திய குற்றச்சாட்டில், குறித்த சிறுமியின் தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (20) சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என புளத்கொஹுபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.ஷ

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 56 வயதான 3 பிள்ளைகளின் தந்தை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது மனைவி வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் நிலையில், இந்த மாதம் 19ஆம் திகதி குறித்த சிறுமி இரவு நேரத்தில் தனது தந்தையால் தனக்கு நேரும் விடயங்கள் குறித்து வகுப்பு ஆசிரியரிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து ஆசிரியரால் அதிபருக்கு அறிவிக்கப்பட்டு, பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சிறுமியின் தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கேகாலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**“ தாய், வெளிநாட்டில் பணிப்புரிந்து வருகின்றார். இரவு நேரத்திலேயே அந்த சிறுமியின் தந்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார். சந்தேகநபரை கேகாலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது**

# புதிய தீயணைப்பு பிரிவு

மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாநகர சபையில் புதிய தீயணைப்பு பிரிவு ஒன்று மாத்தளை மாநகர சபையின் மேயர் எஸ். பிரகாஸ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாநகர சபையின் நிதியம் ஊடாக 5 மில்லியன் ரூபாய் செலவில் இதற்கான கட்டடமும் திறந்து வைக்கப்பட்டது.





தனியார் விடுதிக்குள் தீயில்

# பல்கலைக்கழக மாணவர்களின் புத்தகங்களும் எரிந்தன

சேஹ்ன் செனவிரத்ன

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் ஹிந்தகல வீதியில் நடத்திச் செல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான தனியார் விடுதிக்குள் ஏற்பட்ட தீ காரணமாக, அந்த விடுதிக்கும் மாணவர்களின் புத்தகங்கள் உள்ளிட்ட உடமைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என பேராதனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விடுதிக்குள் நேற்று முன்தினம் (19) இரவு 20- 23 மாணவர்கள் இருந்துள்ளதுடன், இத் தீ பரவலின் போது, எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மாணவர்களின் கற்றல் உபகரணங்கள், மடி கணினிகள், ஆடைகள் உள்ளிட்டவை தீயில் எரிந்து கருகியுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் இரண்டாம் வருடத்தில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்விடுதியில் தங்கியுள்ளனர் என்றும் இத்தீயால் தமது உடைமைகளை இழந்த மாணவர்கள் 10 பேருக்கு உபபீடாதிபதி நிதியத்திலிருந்து தலா 7,500 ரூபாய் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தீ பரவலுக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என தெரிவித்துள்ள பேராதனைப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

வீதியை புனரைமைக்குமாறு கோரி

# சிங்காரவத்தை தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்

எஸ்.கணேசன்

பொகவந்தலாவை சிங்காரவத்தை தோட்டத்திற்கு செல்லும் பிரதான வீதியை புனரமைத்து தருமாரு கோரி தோட்ட மக்கள் பதாதைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

சிங்காரவத்தை தோட்டத்தின் கிராம அபிவிருத்தி உறுப்பினர்களின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் சுமார் இரண்டு மணித்தியாலயம் இடம்பெற்றது. நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட சிங்காரவத்தை தோட்டத்தில் 300க்கும் மேற்பட்ட



குடும்பங்களை சார்ந்த 1,800க்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பொகவந்தலாவ நகரத்திலிருந்து இத்தோட்டத்திற்கு செல்லும் ஒன்பது கிலோமீட்டர் கொண்ட பிரதான வீதி குண்டும், குழியுமாக போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் காணப்படுகிறது.

இப்பாதையை நோயாளர்கள், கர்ப்பிணி தாய்மார்கள், முதியோர்கள் என அன்றாடம் தொழிலுக்கு செல்பவர்களும் பயன்படுத்துகின்றனர்.

இதேவேளை ரொக்கில், சிங்காரத்தை, வானக்காடு, மோரா மேற்கு பிரிவு ஆகிய தோட்டங்களை சேர்ந்த மக்கள் பயன்படுத்தும் பாதையாகும்.

வாகன வசதிகள் இல்லாத காரணத்தினால் பாடசாலை மாணவர்களும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சுமார் 25 வருடங்களுக்கு மேல் வீதியை சீர் செய்யாத காரணத்தினால் மண் வீதியாகவே காணப்படுகிறது.

புனரமைப்பு செய்து தருவதாக அரசியல்வாதிகள் அடிக்கல் நாட்டிய போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத காரணத்தினால் இத்தோட்டத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாதைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பி பிரதான வீதியில் எதிர்ப்பினை முன்னெடுத்தனர்.



# மரக்கறிகளை நாசம் செய்த மழையால் விவசாயிகள் கடும் கவலை

துவாரகஷான்

தாம் எதிர்பார்த்த விவசாய விளைச்சலை, கடந்த வாரம் பெய்த மழை நாசமாக்கிவிட்டதாகவும். இதனால், பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் லிந்துலை பிரதேசத்தில் உள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தலவாக்கலை மற்றும் டயகம பிரதேசங்களில் உள்ள அதிகமான விவசாய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர்.

உரத் தட்டுப்பாடு, கிருமி நாசினிகளின் விலை அதிகரிப்பு என்பதால் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ள நிலையில் பெய்த மழையும் தங்களுடைய வாழ்வாதாரத்துக்கு பெரும் முட்டுக்கட்டையாகவே இருக்கின்றது என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடன் மற்றும் தங்க நகைகளை அடகு வைத்து அதன் ஊடாக பெற்ற பணத்தை வைத்தே விவசாய நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்த அவர், எதிர்பார்த்தளவு விளைச்சல் கிடைக்காமையால், பொருளாதார ரீதியில் பெரும் சிக்கல்களை சந்தித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளது.

தற்போது பெற்ற கடனையும் நகைகளையும் திருப்ப முடியாத நிலையில் கடனாளியாகவே தாங்கள் மாறிவிட்டதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.



# நுகர்வுப் பண்டங்களை வாங்க முடியாது திண்டாடும் மக்கள்

நாளாந்தம் நுகரவேண்டிய பண்டங்களைக் கொள்வனவுச் செய்யும் போது, முதல்நாள் பெறுமதியை விஞ்சும் அளவுக்கு பொருட்களின் விலைகள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. அந்தளவுக்கு நாட்டில் பணவீக்கம் ஏற்பட்டுள்ளது. அவற்றை தீர்ப்பதற்கு இந்த அரசாங்கத்திடம் துரிதமான திட்டங்கள் எவையுமே இல்லை.

பணவீக்கத்தால் நிரந்தர வருமானம் பெறுபவர்களின் உண்மையான வருமானம் குறைகிறது. நாளாந்தம் கூலிகளைப் பெறுவோர், வேலைகளை இழந்து நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். வேலையை இழந்து இருப்பவர்களும், அவர்களில் தங்கிவாழும் குடும்பத்தினரும் நிர்க்கதியாகியுள்ளனர்.

இதனால், 'சமாளித்து'க் கொண்டு ஜீவியம் நடத்தவேண்டிய நிலைமையிலேயே மக்கள், ஒவ்வொரு நாளையும் கடத்திக்கொண்டிருக்கின்றனர். 'எப்போது விடியும் என்றிருந்தவர்கள், ஏன்தான் விடிகிறதோ' என்ற நினைக்கின்றனர்கள்.

பொருட்கள், பண்டங்களின் விலைகள் ஒருபுறம் அதிகரித்துச் செல்கையில், சேவைகளின் கட்டணங்களும் எகிறி நிற்கின்றன. இதனால், நுகர்வு வீழ்ச்சியடைகின்றது; விற்பனைகளும் சடுதியாகச் சரிந்துள்ளன.

டொலர் தட்டுப்பாட்டை இறக்குமதித்துறை வெகுவாக பாதித்துள்ள நிலையில், தொழில்வாய்ப்பின்மை, மின்சார தடை, பசளை தட்டுப்பாடு, சேவைகளுக்கான கட்டணங்கள் அதிகரிப்பு உள்ளிட்டவை காரணமாக, ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கான மாதாந்த குடும்பச் செலவைக்கொண்டு, ஒரு மாதத்துக்கு மட்டுமே அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யமுடிகின்றது. அவையும், மாதம் நிறைவடைவதற்கு ஐந்து அல்லது ஆறு நாள்களுக்குள்ளே; இல்லையேல் அதற்கு முன்பே நிறைவடைந்துவிடுகின்றது. மாதாந்த வருமானம் பெறுவோர், மாதம் நிறைவடையும் வரையிலான இன்றேல் சம்பளம் கிடைக்கும் வரையிலான அந்த நாள்களை கடும் சிரமங்களுக்கு மத்தியிலேயே கடக்கின்றனர்.

இதற்கிடையில் பண்டங்களின் பக்கமே தலையைக் காட்டமுடியாத அளவுக்கு விலைகள் அதிகரித்துள்ளன. பால் தேநீர் குடித்தது எப்போதென நினைவூட்ட முடியாத நிலைமையில் பலரும் இருக்கின்றனர். இதற்கிடையே, பிஸ்கட் வகைகளும் ஒன்றுக்கு மூன்று மடங்குகளுக்கு மேல் அதிரித்துவிட்டன.

பால்தேநீருடன் பிஸ்கட்டையும் கடித்துக்கொண்டு ஒருவேளை உணவு நேரத்தை சமாளித்துக்கொண்டிருந்தவர்கள், தற்போது வெறும்வயிற்றுடன் இருக்கின்றனர். வேலைவாய்ப்பின்மை, விலை அதிகரிப்புகள், மேலதிக கொடுப்பனவுகள் குறைப்பு, சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவுகளில் கையை வைப்பதால், பல குடும்பங்கள் தடுமாறிக்கொண்டிருக்கின்றன.

பால்மா, பிஸ்கட் வகைகள் சாதாரண குடும்பங்களுக்கு 'இமயமலை'யாய் இருக்கிறது. அதுமட்டுமன்றி, ஏற்கெனவே பல முறை சுட்டிக்காட்டியது போன்று, தரமும் நிறையும் குறைந்துகொண்டே செல்கிறது. இதனால், பெரும் நகரங்களில் வாடகை வீடுகளில் வசித்துக்கொண்டு தொழில் செய்தவர்கள், மூட்டை, முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு சொந்த ஊர்களுக்கு படையெடுக்கின்றனர்.

பொருளாதார சுமை தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றது. நுகர்வு பண்டங்களை வாங்க முடியாத அளவுக்கு மக்கள் அல்லல்படுகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணாவிடின், நிலைமை இன்னும் மோசமாகும் என்பதே எமது எதிர்வுகூறலாகும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ஆட்சியைப் பிடிக்கும் மகுட வாசகம் 'சிஸ்டம் சேஞ்ச்'



என். கே அஷோக்பரன்
Twitter: nkashokbharan

'சிஸ்டம் சேஞ்ச்' (கட்டமைப்பு மாற்றம்) என்ற சொற்றொடர், சஜித் பிரேமதாஸ முதல் அநுர குமார திஸாநாயக்க வரை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை எதிர்க்கும் கட்சிகள் அனைத்தும், உச்சரிக்கும் மந்திரமாக மாறியுள்ளது.

ஆனால், இது ஆட்சியைப் பிடிக்க விரும்பும் அரசியல்வாதிகள் மட்டும் சொல்லும் வார்த்தை அல்ல! பொதுவாகவே சமகால யதார்த்தத்தில், அதிருப்தி கொண்டுள்ள பலரும், 'சிஸ்டத்தின்' மீது பழிபோடுவது என்பது, சர்வசாதாரணமான விடயமாகிவிட்டது.

ஜனநாயகம் என்பது, ஆட்சியைத் தீர்மானிக்கும் பலத்தை மக்களிடம் கொடுத்திருக்கிறது. இன்று, நாம் அனுபவிக்கும் ஜனநாயகக் கட்டமைப்பும் மனித உரிமைகள் தரும் பாதுகாப்பும், மனித சமூகத்தின் பல நூற்றாண்டு போராட்டத்தின் பலனாகும்.

ஜனநாயகம் என்பது, ஓர் இரவில் உருவாகவில்லை. ஜனநாயகம், காலவோட்டத்தில் பல மாறுதல்களை தன்னகத்தே ஏற்றுக்கொண்டுள்ளது. உலக வரலாற்றில், ஜனநாயகத்துக்கு மாற்றாக, பல 'சிஸ்டங்கள்' பரீட்சிக்கப்பட்டன; இன்றும் பரீட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஜனநாயகம் என்பதும், கூர்ப்படைந்துகொண்டேதான் வருகிறது. அதுதான் இந்த ஜனநாயக 'சிஸ்டத்தின்' சிறப்பு.

ஆனால், இந்த ஜனநாயகக் கட்டமைப்புகள் மீது கூட, மக்களுக்கு அதிருப்தி ஏற்படுவது ஆச்சரியப்படும் விடயமல்ல! ஏனென்றால், ஜனநாயகம் என்பது குறைகளற்ற, முழுத் திருப்திதரும் கட்டமைப்பு அல்ல; அப்படியொரு கட்டமைப்பு இருக்கவும் முடியாது.

பல காரணங்களுக்காக மக்கள், தங்கள் நாடுகளில் ஜனநாயகத்தின் செயற்பாட்டில் அதிருப்தி அடைந்துள்ளனர். உதாரணமாக, அரசியல்வாதிகள், ஊழல்வாதிகள் அல்லது, தங்கள் நாட்டில் பொருளாதார நிலைமை மோசமாக உள்ளது என்று நினைப்பவர்கள், ஜனநாயகத்தின் மீது அதிருப்தி அடைவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

மாறாக, தங்கள் நாடுகளில் உள்ள முக்கிய அரசியல் நிறுவனங்கள், போதுமான அளவில் செயற்படுவதைப் பார்ப்பவர்கள் - உதாரணமாக, நீதிமன்றங்கள் அனைவரையும் நியாயமாகவும் சமமாகவும் நடத்துகின்றன; அல்லது, மக்கள், தங்கள் கருத்துகளைப் பொதுவில் வெளிப்படுத்தலாம் என்று நினைப்பவர்கள் - ஜனநாயகம் செயற்படும் விதத்தில், அதிக திருப்தி அடைகிறார்கள்.

இந்த இடத்தில், ஒரு விடயத்தை கவனித்தல் முக்கியமாகிறது. இலங்கை பின்பற்றும் அரசியலமைப்பு ரீதியிலான பிரதிநிதித்துவ ஜனநாயகம் நடைமுறையிலுள்ள ஒரு நாட்டில், அந்த மக்களில் பெரும்பான்மையொன்றுதான், அந்த நாட்டை ஆளப்போகும் தரப்பைத் தேர்ந்தெடுக்கிறது. அந்தத் தேர்ந்தெடுத்தலானது, குறித்த தரப்பினது கொள்கை, நிலைப்பாடு சார்ந்து அமைகிறது.

இலங்கையை பொறுத்தவரையில், இலங்கையின் பெரும்பான்மை என்பது கிட்டத்தட்ட ஏழு தசாப்த காலமாகவே சிங்கள-பௌத்த பேரினவாதத்தையே ஆதரித்து வந்திருக்கிறது. பொருளாதாரக் கொள்கைகள் மாறியிருக்கின்றன; சமூகக் கொள்கைகள் மாறியிருக்கின்றன. ஆனால், பேரினவாதம் மட்டும் தொடர்ந்தும் இலங்கை அரசியலின் அடிநாதமாக இருந்துகொண்டுதான் இருக்கிறது.

இடதுசாரிகளோடு ஆட்சியமைத்து, இலங்கையின் முதலாவது குடியரசுயாப்பைக் கொண்டுவந்த, ஒரு மூடிய பொருளாதாரத்துக்குள் இலங்கையை தள்ளிய சிறிமாவோவுக்கும், "சிறிமாவோவின் இன்னல்மிகு ஆட்சியிலிருந்து மக்களை மீட்பேன்" என்று சொல்லி பதவிக்கு வந்து, இரண்டாவது குடியரசு யாப்பை அறிமுகப்படுத்தி, திறந்தபொருளாதாரத்தை இலங்கைக்கு தந்த ஜே.ஆருக்கும், பொதுவாக இருந்த கொள்கை 'சிங்கள-பௌத்த' பேரினவாதம் ஆகும்.

இலங்கை, ஒற்றையாட்சி நாடு; இலங்கையின் ஒரே உத்தியோகபூர்வமொழி சிங்களம்; இலங்கை அரசு, பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் என்பதோடு அதனைப் பாதுகாப்பது அரசின் கடமையாகும் என்பனவெல்லம், முதலாம் மற்றும் இரண்டாம் குடியரசு யாப்புகளில் மாறாமல் தொடர்ந்த விடயங்கள். இவைதான் அவர்களுக்கு வாக்குப்பெற்றுக்கொடுத்த விடயங்களுமாகும்.

அன்று ஜே.ஆர் தந்த 'சிஸ்டம் சேன்ஞ்' என்பது, பொருளாதாரத்தைத் திறந்ததோடு, நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறையை ஸ்தாபித்ததாகும். ஆனால், இது பொருளாதாரம் இயங்கும் முறையையும் ஆட்சி அதிகாரம் குவிந்த இடத்தையும் மாற்றியதே தவிர, இலங்கையின் அரசியல் கலாசாரத்தை மாற்றவில்லை; அரசியல் கொள்கைகளை மாற்றவில்லை. பேரினவாதமே இலங்கையின் அரசியல் கொள்கையாகத் தொடர்ந்தது; இன்றும் தொடர்கிறது.

சரி! இன்றைக்கு 'சிஸ்டம் சேன்ஞ்' என்று சஜித் பிரேமதாஸ சொல்கிறார்; சம்பிக்க ரணவக சொல்கிறார்; அநுர குமார திஸாநாயக்க சொல்கிறார்; இவ்வளவும் ஏன், தன்னை அரசியல்வாதியாக நினைத்துக்கொள்பவர்கள் பலரும் சொல்லிக்கொள்கிறார்கள்.

ஆனால், இவர்களில் எவரேனும் பேரினவாத அரசியலை கைவிடத்தயாரா? 'சிங்கள-பௌத்த' முன்னுரிமைவாதத்தை கைவிடத்தயாரா?

இலங்கை ஒரு பன்மைத் தேச நாடு என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாரா?

ஒற்றையாட்சியைத் தாண்டிய ஆட்சிமுறை ஒன்றுக்குத் தயாரா?

மொழிச் சமத்துவத்துக்கும், அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் தயாரா?

மதச்சார்பற்ற அரசாக இலங்கையை அங்கிகரிக்க தயாரா?

இவற்றைச் சாதிக்கத்தக்க வகையில் அரசியலமைப்பு மாற்றமொன்றைக் கொண்டுவரத் தயாரா? அப்படி இல்லையென்றால் இவர்கள் சொல்லும் 'சிஸ்டம் சேன்ஞ்' என்பது வெறும் ஏமாற்று வேலையில்லையா?

சிறிமாவோ காலத்தில் சர்வ அதிகாரமும் 'தேசிய அரச சபை' எனும் சட்டவாக்க சபையிடம் குவிந்திருந்தது, ஜே.ஆர், அந்தச் சர்வ அதிகாரத்தை, அங்கிருந்து ஜனாதிபதியிடம் மாற்றினார். அதன் பின்னர், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கொஞ்சமாகக் குறைப்பதும் கூட்டுவதும், மீண்டும் குறைப்பதும் என சந்திரிகா, மஹிந்த, மைத்ரி, கோட்டா காலங்களில் அரசியல் விளையாட்டுகள் விளையாடப்பட்டன.

இன்று, இதைப்போன்றதோர் அதிகாரம் குவியும் புள்ளியைப் பரவலாக்கும் விடயத்தைத்தான் 'சிஸ்டம் சேன்ஞ்' என்று சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பலரும் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள். அரசியல் சந்தர்ப்பவாதத்தில் திழைத்தவர்கள், தமக்கு வாய்ப்பான காலத்தில் அதற்கு ஆதரவும், தமக்கு வாயக்காத காலத்தில் எதிர்த்தும் வருகிறார்கள். அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை, பெரும் சாதனையான மாற்றமாக முன்வைத்தோர்தான், இன்று கிட்டத்தட்ட அதே திருத்தங்கள் மீள முன்வைக்கப்படும்போது விமர்சிக்கிறார்கள். ஏனென்றால், அன்று அவர்கள் அரசியலமைப்பு திருத்தம் செய்யும் தரப்பின் பக்கம் நின்றார்கள்; இன்று எதிர்த்தரப்பில் நிற்கிறார்கள்.

இந்த வகையறா ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் இன்னும் தாம் கைவிடமுடியாது தவிர்க்கின்ற கம்யுனிஸக் கனவில், இன்னொரு வடகொரியாவாக இலங்கையை மாற்ற 'சிஸ்டம் சேன்ஞ்' என்பதை கையிலெடுத்த அநுர குமார, குமார் குணரட்ணம் ஆகிய இடதுசாரி தீவிரவாத சக்திகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

இவர்களின் நோக்கம், ஜனநாயகக் கட்டமைப்பை சரிசெய்வதல்ல; மாறாக, ஒட்டுமொத்த ஜனநாயகக் கட்டமைப்பையும் தகர்த்துவிட்டு, வடகொரியாவைப் போல 'கம்யுனிஸத்தின்' பெயரிலான தமது சர்வாதிகார ஆட்சியை ஸ்தாபிப்பது. இதற்காக இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி நிலையையும் அதனால் மக்களிடம் ஏற்பட்டுள்ள அதிருப்தியையும், மேலும் நீண்டகாலமாக இலங்கையின் அரசியலால் மக்களடைந்துள்ள அயர்ச்சியையும் தமக்கு சாதகமாக்க, இந்த இடதுசாரி சர்வாதிகாரக் கூட்டம் முயற்சி செய்துகொண்டிருக்கிறது.

ஜே.வி.பிதான், கடந்த இரண்டரை தசாப்தங்களில் இலங்கை கண்ட மிகப்பெரிய பேரினவாத சக்தி. தமது அரசியல் இருப்பைக் காப்பாற்றிக்கொள்ள, இனவாதத்தை கையிலெடுத்து, தமிழர்களை அதற்குப் பலிகடாக்களாக்கியவர்கள் இந்த ஜே.வி.பியினர். ஜே.ஆர், இந்தியாவின் அழுத்தத்தால், ஒன்று சேர்த்த வடக்கு-கிழக்கை, வழக்குப் போட்டு பிரிக்க வைத்த இனவாதிகள் ஜே.வி.பியினர் என்ற வரலாறு, தமிழ் மக்கள் மறக்கக்கூடாத வரலாறு. இன்றும்கூட, ஒரு பொய்யான தாராளவாத முகமூடிக்குள் ஒளிந்துகொண்டிருந்தாலும் கூட, அநுரகுமாரவாலோ ஜே.வி.பியினாலோ தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால், ஜே.வி.பி என்பது வெறும் இடதுசாரி கம்யுனிஸக் கட்சி மட்டுமல்ல; அதனோடு பேரினவாதத்தையும் தனது அடிப்படைகளிலேயே கொண்டுள்ள கட்சியாகும்.

பேரினவாதம் என்பது மாறும் வரை, இலங்கையின் 'சிஸ்டம் சேன்ஞ்' என்று சொல்லப்படுவதெல்லாம் வெறுமனே ஒரு தரப்பு, ஆட்சியையும் அதிகாரத்தையும் கைப்பற்றுவதற்கான 'கண்துடைப்பு நாடகங்கள்' மட்டுமே!



## வாழ்வியல் தரிசனம்

வசதியுடன் வாழும்போது, சந்தோசமாக வாழ்ந்தவர்கள், வசதிகுறைந்ததும் குடும்ப உறவுகள் வேண்டாம் என ஒதுங்குவது தவறானது.

எல்லாப் பிரச்சினைகளும் நிலையனவை அல்ல! பிரிவதால் பிரச்சினைகள் குறைவதில்லை. கவலைகள் தான் துரத்தித் துன்புறுத்தும்.

எதையும் தாங்கி வாழ்ந்தால், எந்தப் பிரச்சினையும் அணைந்துபோய் விடும். பொறுமை இல்லாத குடும்பத்தில் நிம்மதி குறைகின்றது. இடையில் வரும் இடர்பாடுகளால் நெஞ்சத்தை வருத்தலாகாது.

சோகம் பல உண்மைகளை உணர்த்துகின்றது. விவாகரத்துப் பெற்ற பின்னர்கூட, தாங்கள் செய்த தவறுகளை நொந்து கொள்வதுண்டு. காலம் நெடுந்தூரம் சென்ற பின்னர் அதை நினைத்துக் கவலைப்படுவது; தொடர்ந்து கவலைகளையே அனுபவிக்க வேண்டுமா?

தேவையற்ற வீம்பு இருப்பதால், தோல்விதான் உருவாகும். கணவன் - மனைவி, நிர்மலமான உறவுடன் வாழ்க்கையை நடத்தினால், அவர்களின் பரம்பரைகள் எழுச்சியுடன் வாழ்வார்கள். குடும்ப வாழ்வில் நித்திய பொறுமை அவசியம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வவுனியா விவசாயிகள்

## நெல்லை விற்பனை செய்ய முடியவில்லை

சிறந்த விலை இன்மை, நெல்லைக் கொள்வனவு செய்ய எவரும் ஆர்வம் செலுத்தாமை போன்ற காரணங்களால் நெல்லை விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுவதாக, கொக்குவெளி, பேயாடிகூழாங்குளம், ஓயார்சின்னக்குளம் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது சிறுபோக அறுவடை இடம்பெற்று வரும் நிலையில், ஓர் ஏக்கருக்கு 30 மூடை என்ற ரீதியில் விளைச்சல் கிடைக்கின்றது. எனினும் நெல் ஆலை உரிமையாளர்களோ வெளிமாட்டங்களில் இருந்தோ, நெல்லை கொள்வனவு செய்வதற்கு வராத நிலை காணப்படுகின்றது. இதனால் நிர்ணய விலை வவுனியாவில் காணப்படவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த முறை சேதன பசளையைப் பயன்படுத்தி செய்த போதிலும் விளைச்சல் குறைவாக காணப்பட்ட போதிலும் 10ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு மூடை விற்பனை செய்திருந்தோம். இம்முறை, 40ஆயிரம் ரூபாய்க்கு இரசாயன பசளை போட்டு செய்கையில் ஈடுபட்ட போதிலும், கொள்வனவாளர்கள் இன்மையால் நல்ல விலை கிடைக்கவில்லை. நெல்லையும் விற்பனை செய்ய முடியாமல் இருக்கின்றது. 5,900, 6,900 என்ற ரீதியில் நெல்லை சிலர் கொள்வனவு செய்தாலும், 15 முதல் 20 நாள்கள் கழித்தே பணத்தைத் தருகின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

–க. அகரன்



eChannelling இடமிருந்து

# One-touch Tele-Channelling eChannelling, புதிய One-touch

Tele-Channelling சேவையை அறிமுகம் செய்துள்ளது. இந்தச் சேவையினூடாக, வைத்தியருடன் ஒன்லைன் வீடியோ அழைப்பினூடாக தொடர்பை ஏற்படுத்தி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். நோயாளர்களுக்கு உள்நாட்டிலிருந்து அல்லது வெளிநாடுகளிலிருந்த வைத்தியர்களுடன் ஒன்லைனில் தொடர்பை ஏற்படுத்த முடியும் என்பதுடன், சௌகரியமான முறையில் பிரத்தியேகமான சேவைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

உயர் தரம் வாய்ந்த டிஜிட்டல் சுகாதார பராமரிப்பு தீர்வுகளை வழங்குவதற்கான உறுதி மொழியுடன், டிஜிட்டல் மயமாக்கத்தை நோக்கி இலங்கையை நகர்த்துவதில் பங்களிப்பு வழங்கி, ஒன்லைன் வீடியோ வைத்திய ஆலோசனை சேவைக் கட்டமைப்பை eChannelling தற்போது அறிமுகம் செய்துள்ளது. இதனூடாக நோயாளர்களுக்கு வைத்திய முற்பதிவு சேவைகளை சௌகரியமாக பெற்றுக் கொள்வதுடன், நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கும் பங்களிப்பு வழங்குகின்றது.

தொற்றுப் பரவல் காணப்பட்ட காலப்பகுதியில், தொலைதூர மருந்துச் சேவை வழங்கல் என்பது பல தனிநபர்களுக்கும், குடும்பங்களுக்கும் உயிர்காக்கும் சேவையாக அமைந்திருந்தது. தேசத்துக்கு பிரத்தியேகமான வைத்திய ஆலோசனை மற்றும் ஓரிடத்திலிருந்து ஓடியோ/வீடியோ வசதிகளினூடாக நோயாளர்களின் சுகாதார நிலைகளை கண்காணித்தல் போன்றவற்றை மேற்கொள்ள eChannelling ஆதரவளித்திருந்தது.

தொற்றுப் பரவலின் பின்னர், eChannelling இன் புதிய One-touch Tele-Channelling ஒன்லைன் வீடியோ ஆலோசனை தீர்வுகள் வழங்கல்கள் eChannelling App ஊடாக உள்நாட்டு மற்றும் சர்வதேச நோயாளர்களுக்கு தொடர்பை ஏற்படுத்தி, பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களுடன் வீடியோ அழைப்பினூடாக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள உதவுகின்றது.




தொழில்நுட்பத்தின் சக்தியைப் பயன்படுத்தி, சுகாதார பராமரிப்புக்கான அணுகலை மேம்படுத்தி, eChannelling Tele- Channelling ஒன்லைன் வீடியோ ஆலோசனை வழங்கல் சேவையினூடாக, நோயாளர்களுக்கு பல்வேறு அனுகூலங்கள் வழங்கப்படுகின்றன. அதில் ஒன்லைனில் காணப்படும் காணப்படும் வைத்தியர்கள், குறிப்பிட்ட வைத்தியரை தொடர்பு கொள்வதற்கான நேரம், ஒன்லைன் வைத்தியர்களுடன் முன்பதிவை ஏற்படுத்திக் கொள்ளல் போன்றவற்றை மேற்கொள்ள முடியும். தொலைபேசி ஊடான ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக தம்மை பதிவு செய்து கொண்டுள்ள வைத்தியர்களுடன் முன்பதிவை மேற்கொள்ளும் வசதி நோயாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

மேலும், நோயாளி ஒருவர் முன்பதிவை மேற்கொண்டதும், அது தொடர்பில் வைத்தியருக்கு Doctor App ஊடாக அறிவுறுத்தல் வழங்கப்படுவதுடன், அவர்களின் பரஸ்பர தெரிவுக்கமைய நோயாளருடன் வீடியோ அழைப்பை மேற்கொள்வார். இந்த உள்ளம்சத்தினூடாக வைத்தியர்களுக்கு நோயாளர்களுடன் எங்கிருந்தும், எந்தநேரத்திலும், வெளிநாடுகளிலிருந்து கூட இணைப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

பெருமளவு சௌகரியத்தை வழங்குவதுடன், நோயாளர்களுக்கு வைத்தியர்களுடன் இரண்டு மணி நேரத்துக்கு முன்னதாக முன்பதிவை மேற்கொள்ள முடியும். நோயாளர்களுக்கு உதவும் வகையில், மருத்துவ அறிக்கைகளை பகிர்ந்து கொள்ளும் வசதி காணப்படுவதுடன், வைத்தியர்கள் முன்னர் வழங்கியிருந்த மருத்துவ சிட்டைகளும் பேணப்படும். முன்பதிவு நேரம் வழங்கப்பட்ட காலப்பகுதியில், நோயாளருக்கு வைத்தியர் வீடியோ அழைப்பை மேற்கொள்வதுடன், ஆலோசனை நிறைவுறும் வரை குறித்த அழைப்பு தொடரும்.

# இலங்கையின் நன்மதிப்புடைய உணவு மற்றும் பான வகை நிறுவனமாக நெஸ்லே

LMD இன் மிகவும் நன்மதிப்புடைய நிறுவனங்களின் தரவரிசை வெளியீடு 2022 இல், இலங்கையில் மிகவும் நன்மதிப்புடைய உணவு மற்றும் பான வகை நிறுவனமாக நெஸ்லே லங்கா நிறுவனம் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பல்வேறு தொழில் துறைகளில் உள்ள 100 க்கும் மேற்பட்ட புகழ்பெற்ற வர்த்தக நிறுவனங்களில், நெஸ்லே நிறுவனம் மிகவும் நன்மதிப்புடைய முதல் 20 நிறுவனங்களில் ஒன்றாக இடம்பெற்றுள்ளது.

'எமது வாக்குறுதியான 'நல்லுணவு, நல்வாழ்வு' என்பதற்கு உண்மையாக அர்த்தம் கற்பிக்கும் வகையில், 115 ஆண்டுகளுக்கும் மேலாக ஆரோக்கியமான குடும்பங்கள், வலுவூட்டப்பட்ட சமூகங்கள் மற்றும் பசுமையான இலங்கைக்கு பங்களிக்க நாங்கள் பல்வேறு முயற்சிகள் மூலம் பங்களித்து வந்துள்ளோம். உணவு மற்றும் பான வகைப் பிரிவில் 'துறை சார் வெற்றியாளராக' அறிவிக்கப்பட்டுள்ளமையானது, நாட்டில் நாம் ஆழமாக வேரூன்றியுள்ளதை மீண்டும் உறுதிப்படுத்துவதாக உள்ளது. மேலும், இது போன்ற நன்மதிப்பிற்குரிய தரவரிசையில் நாமும் அங்கீகரிக்கப்பட்டதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். நாம் பல சவால்களை எதிர்நோக்கும் இவ்வேளையில், எமது அன்பிற்குரிய இலங்கை நுகர்வோருக்கு ஆரோக்கியமான மற்றும் சுவையான தயாரிப்புகளை தொடர்ந்து வழங்கும் அதே சமயம், எமது வழங்கல் சங்கிலியிலுள்ள எம்முடன் தொடர்புபட்ட தரப்பினருடன் இணைந்து, சமூகங்களுக்கும், பூமிக்கும் நன்மைபயக்கும் எமது வேலைத்திட்டங்களை




தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதற்கு இந்த அங்கீகாரம் உண்மையிலேயே எமக்கு மிகுந்த ஊக்கமளிக்கிறது,' என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜேசன் அவன்சென்யா கருத்துத் தெரிவித்தார்.

> **தயாரிப்புகள் பூமிக்கு நல்லவை என்பதை உறுதிப்படுத்தவும் நிறுவனம் வலுவான அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது**

உலகின் மிகப்பெரிய உணவு மற்றும் பான வகை நிறுவனமாக, நெஸ்லே ஆனது 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாகத் திகழ்ந்து வந்துள்ளது. 'இன்றும், எதிர்வரும் தலைமுறையினருக்கும் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருவது' என்ற அதன் நோக்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்பட்டு, நெஸ்லே தனது பல்வேறுபட்ட உணவு மற்றும் பான வகை வரிசை மூலம் இளமை முதல் முதுமை வரை தலைமுறை தலைமுறையாக நுகர்வோருக்கு ஊட்டமளித்து வருகிறது.

இலங்கையில் விற்பனை செய்யப்படும் நெஸ்லே தயாரிப்புகளில் 90% க்கும் அதிகமானவை குருநாகலில் உள்ள அதன் அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவதால், இந்நிறுவனம் நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்து வருகிறது. நிறுவனத்தால் நேரடியாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ள 800 க்கும் மேற்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை ஆதரிப்பதற்கு மேலதிகமாக, தேங்காய்ப் பால் மாவின் மிகப்பெரிய ஏற்றுமதியாளர்களில் ஒன்றாகவும், இலங்கையில் அதிகளவில் புதிய பால் சேகரிப்பாளர்களில் ஒன்றாகவும், நெஸ்லே லங்கா நிறுவனம் உள்நாட்டு சமூகத்திற்கும் மற்றும் தனது வழங்கல் சங்கிலியிலுள்ள 25,000 க்கும் மேற்பட்ட விவசாயிகள், பாற்பண்ணையாளர்கள் மற்றும் ஏனைய வணிகப் பங்காளர்களுக்கு ஆதரவளித்து வருகிறது. 2050 ஆம் ஆண்டளவில் தனது வழங்கல் சங்கிலி முழுவதும் நிகர பூச்சிய உமிழ்வை அடையும் நோக்கத்தை எய்துவதன் மூலம், அதன் தயாரிப்புகள் பூமிக்கு நல்லவை என்பதை உறுதிப்படுத்தவும் நிறுவனம் வலுவான அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

மும்பை

# 26/11 பாணியில் மீண்டும் தாக்குதல்

## பாகிஸ்தான் எண்ணிலிருந்து வாட்ஸ் அப் மூலம் மிரட்டல்

மும்பை பொலிஸ் போக்குவரத்து கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு வெள்ளிக்கிழமை (19) வாட்ஸ் அப்மூலம் ஒரு தகவல் வந்துள்ளது. அதில், மும்பையில் 26/11 பாணியில் மீண்டும் தாக்குதல் நடத்துவோம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் செல்போன் எண்ணிலிருந்து அனுப்பப்பட்டுள்ள அந்த தகவலின் 'ஸ்க்ரீன்ஷாட்' சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. 6 பேர் இந்த தாக்குதலை நடத்துவார்கள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ராஜஸ்தான் மாநிலம் உதய்ப்பூரில் கடந்த ஜூன் மாதம் தையல்காரரை தலை துண்டித்து கொலை செய்ததைப் போன்ற சம்பவங்களும் நிகழும் என அந்த வாட்ஸ் அப் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது குறித்து மும்பை பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர். இதர பாதுகாப்புப்படை அமைப்புகளுக்கும் இதுதொடர்பாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மும்பை காவல் ஆணையர் விவேக் பான்சாக்கர் கூறும்போது, "பாகிஸ்தான் செல்போன் எண், 28 மொஹலா அஜிஸ்காலனி, வெண்டலா சாலை, ஷாத்ரா, லாகூர் என்ற முகவரியில் வசிக்கும் முகமது இம்தியாசுக்கு சொந்தமானது. இந்த தகவலையடுத்து கடற்கரை பகுதியில்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது" என்றார்.

திருவனந்தபுரம்



# தாய்க்கு 2 ஆவது திருமணம் செய்து வைத்த மகள்

தனது தாயார் தனிமையில் தவித்து வருவதை உணர்ந்த மகள், தாய்க்கு இரண்டாவது திருமணம் செய்து வைத்த சம்பவமொன்று திருவனந்தபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

கேரள மாநிலம் திருச்சூரை சேர்ந்தவர் 59 வயதான பெண்ணின் கணவன், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர். இருவருக்கும் திருமணமாகிவிட்டன. அப்பெண் மட்டுமே தணிமையில் வாழ்ந்து வந்துள்ளார்.

இந்தநிலையில் தனது தாயார் தனிமையில் தவித்து வருவதை உணர்ந்த மகள்களில் ஒருவர், கண்டிப்பாக தனது தாயாருக்கு ஒரு துணை வேண்டும் என்று சிந்திக்கத்தொடங்கினார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதே பகுதியை சேர்ந்த மனைவியை இழந்து தனிமையில் வாழ்ந்து வந்த 63 வயதானவர் தனது தாய்க்கு ஏற்ற துணை என முடிவு செய்தார்.

தனது தாயின் தனிமை பற்றியும், அவருக்கு ஒரு துணை வேண்டும், அது நீங்களாக இருந்தால் மிகவும் நல்லது என்று உருக்கமாக அவரிடம் கூறினார் பிரசிதா. இதனை புரிந்து கொண்டவர் 2-வது திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தார்.

இருவரின் பிள்ளைகளும் அதற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. அதன் பின்னர், கோவில் வைத்து இருவருக்கும் திருமணம் செய்துவைக்கப்பட்டது.

பெங்களூரு

# காதலியை விபச்சாரத்தில் தள்ளிய காதலன்

வேலை வாங்கி தருவதாக அழைத்து வந்து காதலியை விபச்சாரத்தில் தள்ளிய காதலன் உட்பட மூன்று பேரை பொலிஸார் கைது செய்தனர்.

மாண்டியாவை சேர்ந்த 30 வயதானவர் அதே பகுதியை சேர்ந்த இளம்பெண்ணை சில ஆண்டாக காதலித்தார். மூன்று ஆண்டுக்கு முன் காதலியிடம் வேலை வாங்கித் தருவதாக கூறி, பெங்களூரு அழைத்து வந்து, 40 வயதான பெண்ணிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றார்.

அவர் அந்த இளம்பெண்ணை பலவந்தமாக விபாச்சாரத்தில் தள்ளினார். இதற்கு 35 வயதான தனியார் லாட்ஜ் உரிமையாளரும் உடந்தையாக இருந்துள்ளார். வாடிக்கையாளர்களை அப்பெண்ணுக்கு அனுப்புவது இவரது வழக்கம்.

இவர்களது தொந்தரவு தாளாத இளம்பெண், ஹைகிரவுண்ட்ஸ் முறைப்பாடு செய்ததை அடுத்து அந்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.

புதுடெல்லி

# கர்ப்பிணிக்கு இடைக்கால 'ஜாமின்'

'தாய்மை காலத்தில் ஒவ்வொரு கர்ப்பிணியும் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும்' என கூறிய புதுடில்லி உயர் நீதிமன்றம், கொலை முயற்சி வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண்ணுக்கு, பிரசவத்துக்காக மூன்று மாத இடைக்கால, 'ஜாமின்' வழங்கி உத்தரவிட்டது.

புதுடில்லியைச் சேர்ந்த பெண்ணொருவர், கொலை முயற்சி மற்றும் கடத்தல் வழக்குகளில் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அந்த பெண் தற்போது கர்ப்பமாக இருப்பதால், சிறையில் போதிய வசதிகள் இல்லை என கூறி, ஆறு மாதம் ஜாமின் அளிக்கும்படி, புதுடெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு, நீதிபதி அனுாப் குமார் தலைமையிலான அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, பொலிஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 'கைது செய்யப்பட்டுள்ள பெண், மிகக் கொடிய குற்றத்தில் ஈடுபட்டுள்ளார். அவரை ஜாமினில் விடுவிக்கக் கூடாது' என எதிர்ப்பு தெரிவித்தார்.

எனினும், தாய்மை காலத்தில் ஒவ்வொரு கர்ப்பிணியும் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும். இதற்கு இந்திய அரசியலமைப்பு சட்டம் உரிமை அளித்துள்ளது எனக் கூறிய நீதிபதி, அப்பெண்ணுக்கு இடைக்கால 'ஜாமின்' வழங்கியுள்ளார்.

புதுடெல்லி

# தக்காளி காய்ச்சல் குறித்து

## நிபுணர்கள் கடும் எச்சரிக்கை

சிறு குழந்தைகளை தாக்கும் தக்காளி காய்ச்சல் பாதிப்பு இந்தியாவில் அதிகரித்து வருவதாக, மருத்துவ ஆய்வு இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடான பிரிட்டனில் இருந்து வெளியாகும், 'லான்செட்' என்ற மருத்துவ ஆய்வு இதழில், மருத்துவ நிபுணர்கள் எழுதியுள்ள கட்டுரையில் கூறப்பட்டு உள்ளதாவது:



இளம் குழந்தைகளை தாக்கும் தக்காளி காய்ச்சல் பரவல் இந்தியாவில் அதிகரித்து வருகிறது. கேரளாவில் இதுவரை 82 குழந்தைகளுக்கும், ஒடிசாவில் 26 குழந்தைகளுக்கும் இதன் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. கடும் காய்ச்சல், உடலில் சிவப்பு நிறக் கொப்புளங்கள் உருவாகுவது ஆகியவை இதன் அறிகுறிகளாகும். இந்த கொப்புளங்கள் பெரிதாகி, தக்காளி அளவுக்கு பெரிதாகும் என்பதால், இது தக்காளி காய்ச்சல் என அழைக்கப்படுகிறது. தற்போதைக்கு கேரளா, ஒடிசா, தமிழகத்தில் இதன் தாக்கம் உள்ளது. இது, 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளையே அதிகம் தாக்கும்.

இதே நேரத்தில் தற்போது இந்தியாவில், 9 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளிடமும் இதன் பாதிப்பு உள்ளது. இந்தக் காய்ச்சலை உருவாக்கும் வைரஸ் மிக வேகமாக பரவக் கூடியது.

பெங்களூரு:



# தொட்டில் கட்டி சிகிச்சைக்கு அழைத்து செல்லும் அவலம்

கர்நாடக மாநிலம் தட்சிணகன்னடா மாவட்டம் கடபா தாலுகாவில் நுஜிபல்டிலா அருகே கல்லுகட்டேயை அடுத்து பாலக்கா என்ற சிறிய மலைக்கிராமம் உள்ளது.

இந்த கிராமத்திற்கு முறையான வீதி வசதி இல்லை. ஒத்தையடி பாதை மட்டுமே உள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் அவசர உதவிக்கு கடபா செல்ல மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள்.

தேசிய Fuel Pass தளத்தை நடைமுறைப்படுத்த

# டயலொக் ஆசிஆட்டா, MIT, ICTA ஆகியவற்றுக்கு அங்கிகாரம்




டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி அமலி நாணாயக்கார, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும தலைமை நிதி அதிகாரி Hong Zhou Wong, ICTA இன் தலைவர், ஜயந்த டி சில்வா, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கௌரவ. காஞ்சன விஜேசேகர, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன, MillenniumIT ESP இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷெவன் குணதிலக்க

**தேசிய Fuel Pass தளத்தை நடைமுறைப்படுத்துவதற்காக டயலொக் ஆசிஆட்டா, MIT மற்றும் ICTA ஆகியவை மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.**

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியை நிர்வகிப்பதற்காக இந்த தளத்தை டயலொக் மற்றும் MIT, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

தேசிய Fuel Pass அமைப்பின் வசதியாளர்களான, நாட்டின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MillenniumIT ESP மற்றும் ICTA ஆகிய நிறுவனங்களுக்கு மின்சார மற்றும் வலுசக்தி அமைச்சு தனது பாராட்டுகளை தெரிவித்தது. சமீபத்தில், ஒரு நிகழ்வின் போது, மூன்று நிறுவனங்களின் விலைமதிப்பற்ற மற்றும் அத்தியாவசியமான பங்களிப்பு மற்றும் நிபுணத்துவம் ஆகியவை தளத்தின் மேம்பாடு மற்றும் ஒதுக்கீடு அடிப்படையிலான எரிபொருள் விநியோக முறையை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்காக அமைச்சகம் அங்கீகரித்தது.

செயல்படுத்தப்பட்டதிலிருந்து, தேசிய Fuel Pass தளம் நாடளாவிய ரீதியில் உள்ள 93% எரிபொருள் நிலையங்களால் வெற்றிகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இன்றுவரை 11 மில்லியனுக்கும் அதிகமான பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுமக்கள் எரிபொருளைப் பெறுவதற்கு வசதியான மற்றும் எளிதில் அணுகக்கூடிய தீர்வை வழங்குவதற்கும், ஒதுக்கீடு அடிப்படையிலான எரிபொருள் விநியோக முறையை எளிதாக்குவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய Fuel Pass, இன்றுவரை 6 மில்லியன் வாகனப் பதிவுகளைத் தாண்டியுள்ளது.

டயலொக் மற்றும் MillenniumIT ESP ஆகியவை தேசிய Fuel Pass தளத்தை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு இலவசமாக ஆதரிக்கவுள்ளதுடன் மேலும் சிறப்பு பிரிவுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய மேலதிக செயல்பாடுகளை அறிமுகப்படுத்த மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சகம் மற்றும் ICTA ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும். இலங்கை மக்களுக்கு நிலையான எரிபொருள் விநியோக முறையை வழங்குவதோடு, தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது பாரியளவிலான தேசிய சேமிப்பிற்கு வழிவகுத்தது, மேலும் எரிபொருள் இறக்குமதிக்கான மாதாந்த செலவு 500 மில்லியனிலிருந்து 230 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது கருத்து தெரிவித்த மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் கௌரவ. அமைச்சர் காஞ்சன விஜேசேகர, "இலங்கை அரசாங்கத்தின் சார்பாக, தேசிய எரிபொருள் அனுமதிச் சட்டத்தின் மூலம் பொதுமக்களின் எரிபொருள் நெருக்கடியின் சுமையைக் குறைக்க மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுடன் இணைந்துக்கொண்டமைக்காக ICTA, MillenniumIT ESP மற்றும் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ஆகியவற்றுக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தேசிய நெருக்கடிக்கு உடனடித் தீர்வைக் காண்பதில் உறுதியான அர்ப்பணிப்புடன் நேர்மறையாகவும் செயலூக்கமாகவும் இருப்பதற்காக அனைத்து பங்குதாரர்களுக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். லங்கா IOC மற்றும் சிலோன் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆதரவு மற்றும் தேசிய இளைஞர் கழகம் மற்றும் தேசிய இளைஞர் பேரவையின் தனிநபர்களின் தன்னார்வ முயற்சிகள் இல்லாவிட்டால் இந்த முயற்சி இன்றுள்ள முழு அளவிலான வெற்றியினை கண்டிருக்காது. ஒவ்வொரு தனிநபருக்கும் அவர்களின் அன்றாட நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கான உத்தரவாதமான எரிபொருள் ஒதுக்கீட்டை வழங்குவதே எங்களின் நோக்கமாக இருந்தது, மேலும், இந்த அமைப்பு மூலம், நாங்கள் அதை இன்று நனவாக்கியுள்ளோம்.

இந்த முன்முயற்சி பற்றி கருத்து தெரிவித்த, ICTA இன் தலைவர் ஜயந்த டி சில்வா, "இந்த தேசிய முன்முயற்சியின் ஒரு பகுதியாக இருந்ததற்கும் தேசிய Fuel Pass இன் வளர்ச்சிக்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்கும் வாய்ப்பு கிடைத்தமையினையிட்டு நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். Fuel Pass இன் தாக்கம் பொருளாதார கண்ணோட்டத்தில் இருந்தும் சமூக கண்ணோட்டத்தில் இருந்தும் பிரமாண்டமாக தெரியும். நமது தேசம் எதிர்கொண்டுள்ள சில பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தொழில்நுட்பத்தின் பங்கு மிக முக்கியமானது என்று நான் உறுதியாக நம்புகின்றேன். அரசாங்கத்தின் அனைத்து ICT திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கான உயர்மட்ட அமைப்பாக, இலங்கையர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கும் பயனுள்ள டிஜிட்டல் தீர்வுகளை இயக்குவதற்கு தேவையான பங்குதாரர்களுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ கருத்து தெரிவிக்கையில், "இந்த தேசிய முயற்சியின் ஒரு அங்கமாக எங்களை அழைத்தமைக்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு நாங்கள் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம். முழு நாடும் ஸ்தம்பிதமடைந்தபோது, தொழில்நுட்பத்தின் சக்தியின் மூலம் தேசம் இந்த சவாலை சமாளிக்க உதவுவது எங்கள் பொறுப்பு என்று டயலொக்கில் நாங்கள் உணர்ந்தோம். Millenium IT மற்றும் ICTA ஆகியவற்றின் உதவியுடன், டயலொக் குழு மீண்டும் நமது நாட்டின் மிகப்பெரிய தேவையின் போது நிலையான எரிபொருள் மேலாண்மை அமைப்புடன் ஒன்று கூடி, 3 வாரங்களுக்குள் தீர்வை வழங்க முன்வந்ததுடன், தேசத்தின் முன்னேற்றத்திற்கு உதவுவதற்கான தீர்வின் செயல்பாட்டை துரிதப்படுத்தியது.

MillenniumIT ESP இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷெவன் குணதிலக்க கருத்துத் தெரிவிக்கையில், "எரிபொருள் வரிசைகளை நீக்குதல், மில்லியன் கணக்கான டாலர்களை மிச்சப்படுத்துதல் மற்றும் தேசத்திற்கு நியாயமான எரிபொருளை விநியோகிப்பதை உறுதி செய்தல் ஆகியவை தேசிய Fuel App இனை வெற்றிகரமாக செயல்படுத்தியமைக்கான சான்றாகும். தேசிய அளவில் App இனை தொடங்குவது என்பது சந்தேகத்திற்கு இடமின்றி சவாலான விடயமாகும். இருப்பினும் அமைச்சரின் வழிகாட்டுதல் மற்றும் அமைச்சகத்தின் சிறந்த ஒத்துழைப்பு, ICTA, MillenniumIT ESP மற்றும் டயலொக் ஆகியவை இறுதி இலக்கை அடைவதில் பங்களித்தன. தேசிய Fuel App ஆனது, ஒரு தேசிய நெருக்கடியைத் தணிக்க தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது. இந்த செயற்றிட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து குழுக்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்" என மேலும் தெரிவித்தார்.




படத்தில் இடமிருந்து வலம்: டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹவிற்கு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் சார்பாக பாராட்டுச் சின்னத்தை மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் மின்சக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன ஆகியோர் வழங்குகின்றார்கள்.




படத்தில் இடமிருந்து வலம்: MillenniumIT ESP இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷெவான் குணதிலக்கவிற்கு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் சார்பாக பாராட்டுச் சின்னத்தை மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் மின்சக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன ஆகியோர் வழங்குகின்றார்கள்.




வரலாற்றுப் புகழ்மிக்க அனுராதபுரம் புனித பூமிக்கு சனிக்கிழமை (20) சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் ருவன்வெலி சேய விஹாரதிபதியையும் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.












கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு காரைதீவு கொம்பு சந்தியில் உறியடிக்கும் திருவிழா சனிக்கிழமை (20) இடம்பெற்றது (சகா)








ஒகஸ்ட் 19ஆம் திகதி உலக படப்பிடிப்பாளர் தினமாகும் அந்த தினத்தையொட்டி ஹட்டன் பீ வன் படப்பிடிப்பாளர் சங்கத்தினரால் பத்தனை டெரிக்கிளையார் பாடசாலைக்கு பெயர் பலகை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. (பி.கேதீஸ் )







இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சௌதாம்டனிடம் தோற்ற லெய்செஸ்டர்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சௌதாம்டனுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற நொட்டிங்ஹாம் பொரெஸ்ட்டுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் சமப்படுத்தியிருந்தது.

இந்நிலையில், நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும், லிவர்பூலும் மோதவுள்ளன.



சிம்பாப்வேக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய இந்தியா

சிம்பாப்வேக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

சிம்பாப்வே: 161/10 (38.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷோன் வில்லியம்ஸ் 42 (42), றயான் பேர்ள் ஆ.இ 39 (47) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷர்துல் தாக்கூர் 3/38, மொஹமட் சிராஜ் 1/16, அக்ஸர் பட்டேல் 1/20, தீபக் ஹூடா 1/6, பிரசீத் கிருஷ்ணா 1/28, குல்டீப் யாதவ் 1/49)

இந்தியா: 167/5 (25.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: சஞ்சு சாம்ஸன் ஆ.இ 43 (39), ஷீகர் தவான் 33 (21), ஷுப்மன் கில் 33 (34), தீபக் ஹூடா 25 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: லுக் ஜொங்வி 2/33, சிகண்டர் ராசா 1/16, தனக சிவங்கா 1/38, விக்டர் நயுச்சி 1/32)

போட்டியின் நாயகன்: சஞ்சு சாம்ஸன்

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது இன்று பிற்பகல் 12.45 மணிக்கு நடைபெறவுள்ளது.




ஜேர்மனிய புண்டெஸ்லிகா தொடர்:

# தோற்ற டொட்டமுண்ட், லெய்ப்ஸிக், லெவர்குஸன்

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெஸ்லிகா தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வேர்டர் பிரெமென்னுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் டொட்டமுண்ட் தோற்றது.

இதேவேளை, யூனியன் பேர்லினின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் ஆர்.பி லெய்ப்ஸிக் தோற்றது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெற்ற டி.எஸ்.ஜி 1899 ஹொஃபென்ஹெய்முடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் பயேர் லெவர்குஸன் தோற்றது.




# செல்சி செல்லும் மக்குவாயா?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் பின்களவீரரான ஹரி மக்குவாயாவைக் கைச்சாத்திடுவது குறித்து இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சி வினவியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

29 வயதான மக்குவாயாவின் யுனைட்டெட் எதிர்காலம் குறித்து சந்தேகங்கள் வளர்ந்து வரும் நிலையிலேயே இச்செய்தி வெளிவந்துள்ளது.

செல்சியின் முன்களவீரர் கிறிஸ்டியன் புலிசிச் யுனைட்டெட் செல்வதோடு, மக்குவாயா செல்சிக்கு வரும் யோசனையை செல்சி முன்வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

துருக்கி

விபத்தைத் தொடர்ந்த விபத்துகளில்

# 32 பேர் பலி; 51 பேர் காயம்




துருக்கியில் இரண்டு இடங்களில் இடம்பெற்ற வெவ்வேறான விபத்துக்களைத் தொடர்ந்து அங்கிருந்தோரை வாகனங்கள் மோதியதில் குறைந்தது 32 பேர் கொல்லப்பட்டதுடன், 51 பேர் காயமடைந்துள்ளனர்.

கஸியன்டெப்புக்கருகே நேற்று முன்தினம் காலையில் நிகழ்ந்த வீதி விபத்தொன்று நடைபெற்ற பகுதியை பஸ் மோதியதில் 16 பேர் கொல்லப்பட்டதுடன், 21 பேர் காயமடைந்துள்ளனர்.

பின்னர், மர்டினில் ட்ரக்கொன்று, மூன்று வாகனங்கள் விபத்துக்குள்ளானதையடுத்து நின்ற அவசரசேவை பணியாளர்களை மோதியதில் 16 பேர் கொல்லப்பட்டதுடன் 29 பேர் காயமடைந்துள்ளனர்.

தாய்வான்




## ‘தாய்வான் நீரிணையைக் கடந்த சீன விமானங்கள்’

தாய்வானைச் சுற்றி 12 சீன விமானங்களும், ஐந்து சீனக் கப்பல்களும் நேற்று இயங்குவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தாய்வானின் பாதுகாப்பமைச்சு தெரிவித்துள்ளது. இதில், தாய்வான் நீரிணையின் மத்திய கோட்டைக் கடந்த ஐந்து விமானங்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வானுக்கருகே இராணுவ நடவடிக்கைகளை சீனா தொடருகின்ற நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாய்வானை தமது பிராந்தியமாகவே சீனா உரிமை கோருவதுடன், அதை தாய்வான் அரசாங்கம் கடுமையாக எதிர்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசியின் தாய்வான் விஜயத்தையடுத்தே பதற்றங்கள் அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா



மொஸ்கோ குண்டு வெடிப்பில்

## புட்டினின் நண்பரின் மகள் உயிரிழப்பு

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் நெருங்கிய நண்பரான அலெக்ஸான்டர் டுஜினின் மகளான டர்யா டுஜினா, கார்க் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டுள்ளார்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவுக்கு வெளியேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி புட்டினின் மூளையாக டுகின் கருதப்படுவதுடன், அவரே இலக்காகக் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

குறித்த காரிலேயே டுகின் பயணிக்கவிருந்தபோதும் இறுதி நிமிடத்திலேயே மகளிடமிருந்து தனியாகப் பயணிப்பதற்கு முடிவெடுத்திருந்தார்.

சோமாலியா



30 மணித்தியால ஹொட்டல் முற்றுகை:

## ‘முடிவுக்கு கொண்டு வந்த படைகள்’

சோமாலியத் தலைநகர் மொஹடிஷுவிலுள்ள ஹொட்டலொன்றில், முற்றுகையொன்றை அந்நாட்டுப் படைகள் முடிவுக்கு கொண்டு வந்ததாக இராணுவ அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்டடங்களை சிதைத்த வெடிபொருள்களை படைகள் இன்னும் அகற்றுவதாக குறித்த அதிகாரி கூறியுள்ளார்.

பெரும்பாலும் பொதுமக்களை உள்ளடக்கிய குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

அல்-கொய்தாவுடன் தொடர்புடைய அல் ஷபாப் ஆயுததாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை மாலையில் சுட்டபடி, வெடிபொருள்களை வெடித்து ஹொட்டலுக்குள் நுழைந்த பின்னர் 30 மணித்தியாலங்கள் படைகள் போரிட்டிருந்தன.

இத்தாக்குதலுக்கு அல் ஷபாப் குழு உரிமை கோரியிருந்தது.

அவுஸ்திரேலியா



இரகசிய அமைச்சுகள்:

## விசாரணையை பிரதமர் ஆரம்பிக்கலாம்

கொரோனா வைரஸ் பரவல் காலத்தில் அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொரிஸன், இரகசியமாக முக்கிய அமைச்சுக்களை பதவியேற்றுக் கொண்டமை தொடர்பாக விசாரணையொன்றை தனது அரசாங்கம் கருத்திற் கொள்வதாக அவுஸ்திரேலியப் பிரதமர் அந்தோனி அல்பானிஸ் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

முக்கியமான ஐந்து அமைச்சுக்களை மொரிஸன் இரகசியமாகப் பதவியேற்றிருந்தார். இது, தற்போதைய தொழிலாளர் கட்சி அரசாங்கத்திடமிருந்தும், மொரிஸனின் லிபரல் கட்சியிடமிருந்தும் விமர்சனங்களைச் சந்தித்திருந்தது.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவின் பொறுப்பை தனியே உணர்ந்ததாக தன்னை மொரிஸன் நியாயப்படுத்தியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 22 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.